REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 19 | சுன்னாகம், சர்வதாரி ஆவணி கூ (காந்தி ஆண்டு 79) 29-8-'48, ஞாயிறு | இதழ் 8

அச்சில் ● ● ● ●

**கேத்திர கணிதம்**

ஜே. எஸ். ஸி., எஸ். எஸ். ஸி.
வகுப்புகளுக்குரியது

ஆக்கியோன்
ச. சிதம்பரப்பிள்ளை B.A., B.Sc (Lond.)
(பரமேஸ்வரக் கல்லூரி)

வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பக வெளியீடு

# திகில் தரும் புதிய குண்டு

## அணுவை விஞ்சும் அழிவு?

**அணுக்குண்டின் அனர்த்தங்களை நினைந்து உலக மக்கள் திகிலடைந்துகொண்டிருக்கையில், அணுக்குண்டினும் பார்க்கச் சக்திபடைத்த மகா மோசமானதோர் புதிய அணுக் குண்டை அமெரிக்கா கண்டுபிடித்திருப்பதாகச் செய்தி கிடைத்துள்ளது.**

**இக்குண்டு யுரேனியத்தாற் தயார் செய்யப்படவில்லை. ஜல வாயுவைக்கொண்டே செய்யப்பட்டுள்ளது.**

இப் புதிய அணுக்குண்டு யப்பானிற் பிரயோகிக்கப்பட்ட குண்டிலும் பார்க்க ஆயிரம் மடங்கு உக்கிரமுள்ளதென டொக்டர் ஜே. ஸி. குமரப்பா ஹரிஜன் பத்திரிகையிற் குறிப்பிட்டிருக்கின்றார். ஆங்கிலத்தில் எழுதியுள்ள தமது கட்டுரையில் அவர் மேலுந் தெரிவிப்பதாவது: உலகின் சகல பாகங்களிலுமுள்ள சாதாரண மக்கள் சமாதான வாழ்க்கையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில், பல தேசங்களில் ஆதிக்கம் வகிக்கும் அதிகார வகுப்பினர் அளப்பரிய நாசவேலைக்குத் திட்டம் ஒன்றினை வகுத்துக் கொண்டிருக்கின்றனர்.

### ருஷியா சக்தி

கடந்துபோன இரு மகா யுத்தங்களும் இந்தச் சதிகார வர்க்கத்தினருக்கு எவ்வித பாடங்களையும் படிப்பிக்க முடியவில்லை. ருஷியா அதி தீவிரமாகப் பலம் பெற்று வருகின்றதெனவும் இராணுவப் பயிற்சியிற் சதா ஈடுபட்டு வருகின்றதெனவும் அறிகின்றோம். விமானப் பவனிகளும் ருஷியாவிலே மும்முரமாக நடைபெற்று வருகின்றன. ஸ்டாலின் மகன், தளபதி வஸிலி ஸ்டாலின் விமானப் படையில் அற்புத வேலைகளைச் செய்து காட்டுகின்றார். ருஷியா தான் ஏதோ மகத்தான இராணுவப் பலம் பெற்று வருவதாகப் பிடுங்கி அடுக்குகின்றது.

### யப்பானின் பாடம்

இந்த நிலைமை ஐரோப்பாவில் மட்டுந்தான் நிலவுவதாயில்லை. வலிமையுற்றுள்ள இந்தியாவும், விமானப் படை அமைப்புக்காகத் தனது சொற்ப பணத்தில் ஒரு தொகையைச் செலவுசெய்யவேண்டியிருக்கின்றது. கீழைத்தேசத்திற் பலம் வாய்ந்த ஒரு படையாக விளங்கவேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். இன்னும் இருபதுமாத காலத்தில் இந்தியாவின் விமானப்படை நல்ல பலம் பெறுமென இந்திய அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. இத்துறையிற் செலவாகும் பணத்தொகை ஒருபுறமிருக்க, இத்திட்டத்தின் அடிப்படையான மனப்பக்குவந்தான் மிகுந்த கவலையை உண்டாக்குகின்றது. எமது தலைவர்கள் இராணுவபலத்தில் விசுவாசமும் பக்திசிரத்தையுமுள்ளவர்களென்பதை இது எடுத்துக் காட்டுகின்றது. எமக்குப் பக்கத்திலுள்ள யப்பான் இத்துறையிற் பெற்ற அனுபவம் இவர்களுக்கு நன்கு தெரிந்ததொன்று. அப்படியிருந்த போதிலும் அவர்கள் அதை உணரவில்லை.

### கடன் தீர்க்கும் வழி!

எமது கடற்படையை அமைத்துக்கொள்வதற்கு நாம் ஏனைய வல்லரசுகளின் தயவை நாடவேண்டியவர்களாகின்றோம். பிறநாடுகள் களைந்தெறிந்த பழைய உடைகளையும், எங்கள் கால்களுக்குப் பொருந்தாத சப்பாத்துக்களையும் நாங்கள் பெறுகின்றோம். அந்நாடுகளைக் கவனித்தால் அவை தற்காலத்துக் கேற்ற புதிய யுத்தக் கப்பல்களைக் கட்டுகின்றன. பிறர் உபயோகித்த பழைய சாமான்கள் விலையாகிக்கொள்ளும் ஒரு சந்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

# தலைவரின் இரண்டகச் செயல்

## டொக்டர் நாகநாதன் கடிதம்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் பாரிய தூண்களில் ஒருவரான இணைச் செயலாளர் டொக்டர். ஈ. எம். வி. நாகநாதன் தமிழ்க்காங்கிரஸின் பிரதிநிதிகள் கட்சியினின்றும் விலகிக் கொண்டார். ஆட்சிப் பதவியிலிருக்கும், யூ. என். பிக் கட்சியுடன் தமிழ்க்காங்கிரஸ் சேர்ந்து கொள்வதற்குத் தீர்மானித்திருப்பதை ஆட்சேபித்தே டொக்டர் நாகநாதன் விலகிக்கொண்டார்.

அரசாங்கத்துடன் தமிழ்க் காங்கிரஸ் சேர்ந்து கொள்ளலாமெனச் சமீபத்தில் யாழ்ப்பாணத்திற் கூடிய 'மாபெருங்' கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. இக்கூட்டம் நடைபெற்று 36 மணி நேரத்துக்குள் டொக்டர் நாகநாதன் பின்வருங் கடிதத்தை ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களுக்கு அனுப்பியிருந்தார்.

''எனதருமைப் பொன்னம்பலம் அறிவது:

''அதிக யோசனையின் பின்னர் நான் தமிழ்க்காங்கிரஸ் பிரதிநிதிகள் கட்சியினின்றும் விலகிக் கொள்ளத் தீர்மானித்து விட்டேன். ஆகவே நான் எதிர்க்கட்சியை விட்டு அரசாங்கக் கட்சியுடன்போய் இருந்து கொள்வதை விரும்பவில்லை. ஏனைய தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதிகள் உமக்குப் பின்னால் வந்து யூ. என். பி.க்கூடாரத்துக்குள் நுழைந்து கொள்வதை விரும்பக் கூடும்.


''தமிழ்க் காங்கிரஸின் நோக்கங்களின் 2-வது பிரமாணத்தையும், பல்வேறு கூட்டங்களிலே தமிழ்க்காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானங்களையுங் கவனிக்கும்படி தங்களை வேண்டுகின்றேன். காங்கிரஸின் நோக்கங்கள் குறித்த

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

# குடியேற்றக்கட்டுப்பாடு

## மசோதா நிறைவேறியது

## கொழும்பு—நிருபர் கடிதம்—



26–8–48

குடியேற்றக்கட்டுப்பாட்டு மசோதா அரசியல் வட்டாரங்களில் மிகுந்த ஆரவாரத்தை உண்டாக்கியது உண்மைதான். இதுபற்றிப் பிரதிநிதிகள் சபையிலே எதிர்க்கட்சியினர் கரடியாகக் கத்திய போதிலும் குறித்த மசோதா நிறைவேறியது.

வேறு நாடுகளிற் குடியேற்றக் கட்டுப்பாடுகள் நிலவி வரும்போது, இலங்கைக் குடியேற்றக் கட்டுப்பாடு மசோதாவுக்குப் பிரதிநிதிகள் சபையில் எதிர்ப்பு இருந்தமை பிரதமருக்கு வியப்பாகவேயிருந்தது. இது அவருடைய பேச்சிலிருந்து நன்று அறிய முடிந்தது.

### நல்ல ஆதரவு

புதன்கிழமை பிரதிநிதிகள் சபையில் இம் மசோதாவுக்கு வாக்குகள் எடுத்தபோது 52 பேர் குடியேற்றக் கட்டுப்பாட்டுக்குச் சாதகமாகவும், 35 பேர் அதற்குப் பாதகமாகவும் வாக்களித்தனர்.

இராணி அப்புக்காத்து ஸ்ரீ செல்வநாயகம் (காங்கேசன் துறைப் பிரதிநிதி) இம் மசோதாபற்றிப் பேசும் போது தமது கட்சியாகிய தமிழ்க் காங்கிரஸ் குறித்த மசோதாவை எதிர்த்து நிற்கின்றதெனக் குறிப்பிட்டார். (ஆனால் சென்றவாரம் இம் மசோதாவுக்கு வாக்குகள் எடுத்தபோது ஸ்ரீ பொன்னம்பலத்தையும் ஸ்ரீ செல்வநாயகத்தையும் தவிர்த்து ஏனைய ஐந்து தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதிகளும் விவாதத்திற் கலந்துகொள்ளாது வெளியே நின்று உல்லாசமாகச் சல்லாபித்தனர்.) தான் அம் மசோதாவை ஜனநாயக ரீதியிற் கவனித்து வருவதாகவும் அப்படி நடந்து கொள்வதற்குக் காரணம் தான் ஒரு புரட்சிக்காரனாக விளங்காதிருப்பதேயெனவும் ஸ்ரீ செல்வநாயகம் தெரிவித்தார். தேவைக்கு மிஞ்சி ஓர் அரசாங்கம் அதிகாரத்தைப் பற்றிக்கொள்ளக் கூடாதெனவும், அளவான உரிமைகளை வைத்து ஆட்சிசெய்வதே ஜனநாயகத்தின் முக்கிய பண்பெனவும் அவர் ஜனநாயகத்தின் அருமைபெருமைகளைப்பற்றி அற்புதமாகப் பேசினார். குறித்த மசோதாவானது மக்களிடையே கசப்பையூட்டிப் புரட்சித் தீயை மூட்டக்கூடிய பெற்றி வாய்ந்ததெனவும் ஸ்ரீ செல்வநாயகம் குறிப்பிட்டார்.

### இந்தியச் சிக்கல்

பிரதமர் ஸ்ரீ சேனநாயகா இவ்வளவு இராஜ தந்திரங்களையும் எங்கே கற்றுக்கொண்டாரென்பது புரட்சிப் புலிகளுக்கும் வகுப்புவாதிகளுக்கும் ஒரே ஆச்சரியமாகவேயிருக்கின்றது. இந்தியப் பிரச்சினை சம்பந்தமாக அவர் புதன்கிழமையன்று கிண்ணத்திற் படாமலும் கிடாரத்திற் படாமலும் பேசியிருந்தார். இலங்கைவாழ் இந்தியர்கள் சதா முட்டுக்கட்டை போட்டு வந்தபடியால் அந்தஸ்தை நிர்ணயிப்பது மிகக் கஷ்டமென ஸ்ரீ செல்வநாயகம் அவர் குறிப்பிட்டார். இவ்விஷயத்தில் இந்தியத் தொழிலாளர்களைத் தாம் குறைகூறவில்லையெனவும், இலங்கையிலுள்ள இந்தியப் பண முடைகளே திருகுதாளங்களுக்குக் காலாகவிருந்து, காலங் கடத்தி வந்தனரெனவும் பிரதமர் தமது உள்ளத்தைத் திறந்து பேசியிருந்தார். இவர்கள் தங்கள் சகோதரர்களான இந்தியத் தொழிலாளர்களைச் சுரண்டி வந்தனர் எனவும் அவர் கண்டித்தார்.

### மோத்தா சீற்றம்

இலங்கை வாழ் இந்தியர்களைப்பற்றிச் சென்ற வாரம் ஒரு நாள், இலங்கை இந்தியக் காங்கிரஸ் பிரதிநிதி ஸ்ரீ மோத்தா அவர்கள் பேசும்போது, இலங்கை-இந்தியப்பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்குப் பிரதமர் சேனநாயகா போன்றவர்கள் இந்தியப் பிரதமரிடம் காவடி யெடுத்துச் செல்ல வேண்டியதில்லை யெனவும், இலங்கையில் வதியும் இந்தியப் பிரமுகர்களுடன் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வருவது ஏற்றதெனவுங் குறிப்பிட்டிருந்தார். இத்தகைய மனப்பான்மையுள்ள இந்தியர்கள் துரதிருஷ்டவசமாக இலங்கையில் வதிந்து வருவதினாலேயே இவ்வளவு சீர்கேடு ஏற்பட்டுவிட்டது போலும்.

### அவலநிலை

போதாக்குறைக்கு இது சம்பந்தமாக ஸ்ரீ. ஜி. ஜி. பொன்னம்பலம் (தமிழ்க் காங்கிரஸ்) அவர்களும் இலங்கை வாழ் இந்தியருடன் மாட்டுப்பட்டுக்கொண்டு அவலப்படுகின்றார். இலங்கையிலுள்ள இந்தியர்களுக்குக் குந்தகம் விளைக்கும் எத்தகைய மசோதாக்களையும் தமிழ்க்காங்கிரஸ் எதிர்த்து, இந்தியர்களுடன் சார்ந்து நிற்குமென இலங்கை இந்தியக்காங்கிரஸ் தலைவர்களுக்குப் பல கடிதங்களை ஸ்ரீ ஜி. ஜி. எழுதியுள்ளார் என அறிகின்றேன். இக் கடிதங்கள் பத்திரிகைகளில் வெளியாகிவிட்டால், அது பெரிய சங்கைக் குறைச்சலெனக் கருதிப்போலும், மசோதா சபையில் நிறைவேறமுன்னர் தமிழ்க் காங்கிரஸ் அரசாங்கக் கட்சியுடன் போய் இருந்துகொள்வதற்குத் தயங்குகின்றது.

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸ் கூட்டத்துக்குப்பின்னரும் ஸ்ரீ செல்வநாயகம் அவர்கள் குடியேற்றக் கட்டுப்பாட்டு மசோதாவைத் தும்பு பறக்கத் தாக்கியமை அனைவருக்கும் ஆச்சரியத்தை உண்டாக்கியது.

### மந்திரிப் பதவி

நிற்க, ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களுக்கு யூ. என். பி. மீன்பிடிப் பகுதி மந்திரி வேலையை உதவுவதற்கு யோசித்திருக்கின்றதென அறிகின்றேன். ஸ்ரீ சிவபாலன் (திருகோணமலைப் பிரதிநிதி) அவர்களுக்கு ஒரு உதவி மந்திரிப் பதவி கிடைக்

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹரிசனர் நிலைமை

— ச. ஆறுமுகராசா —

தற்போது இந்தியாவிற் சாதிக்கட்டுப்பாட்டை அடியோடு தகர்த்தெறிவதற்கேற்றசகல காரியங்களும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. சனங்களும் அவற்றை மனமுவந்து ஏற்றுக்கொள்கின்றனர். இந்துக் கோயில்கள் யாவும் ஹரிசனங்களுக்குத் திறந்துவிடப்பட்டிருக்கின்றன. ஆலயப் பிரவேசத்தைத் தடைசெய்வது சட்டபூர்வமாகக் குற்றமெனவும் கருதப்படுகின்றது. இந்நிலையில் யாழ்ப்பாணத்தவர் பிற்போக்கான நிலையிலேயே இருக்கின்றனர். தம் தாய்நாட்டையும், ஒப்பற்ற பெருந் தலைவர்களின் உபதேசங்களையும் பின்பற்ற மறுக்கின்றனர். இவற்றை யோசிக்கும்போது உண்மையாகவே ஆச்சரியமாக விருக்கின்றது.

'தாழ்த்தப்பட்டோர்' என்னுஞ் சொற்றொடர் ஒன்றுமே அவர்களுக்குச் செய்யப்படும் அநீதியையும, துரோகத்தையும் எடுத்துக்காட்டுகின்றது. அவர்கள் உண்மையில் எவ்வகையிலும் தாழ்ந்தவர்கள் அல்லர். அநியாயமாகத் தாழ்த்தப்பட்டிருக்கிறார்கள் என்னும் பொருள் தானுகவே பிரதிபலிக்கின்றது. சாதிக்கட்டுப்பாடு தமிழருக்கே புதிதானது. ''யாதுமூரே யாவரும் கேளிர்'' ''சாதியிரண்டொழிய வேறில்லை......'' என்பது நுண்பொருள் பொதிந்த பழைய தமிழ்ப் பாடல்கள். அவை பண்டைத் தமிழரின் விரிந்த மனப்போக்கைத் தெளிவுறுத்துவன. நற்குண நற்செய்கைகளுக்குத் தம்மை இட்டுக்கொண்டவர் பெரியோர்; அவ்விதம் இடாதவர் தாழ்ந்தோர். இவ்வாறு இயல்பாகவே பெரியோராயும் தாழ்ந்தோராயும் வருவதை யாரும் தடுக்க முடியாது. அப்பெருமையையும் இழிதகைமையையும் ஒப்புக்கொண்டுதானுக வேண்டும். காந்திஜியை மிக உத்தமமான சாதியைச் சேர்ந்தவரென்று மனமாரப் போற்றி வழுத்த யாரும் பின்னடைவரா? இல்லை. அதை விடுத்து, சமூகத்தில் ஒரு பகுதியார் பெருமையடைந்து பெரியாராவதற்கு இன்னெரு பகுதியினரைத் தாழ்த்தி வைத்திருத்தல் எத்துணை மூடத்தனமானது! இயல்பாகவே பெரியோராய் வருவதற்கு விரும்புபவர், தாம் மற்றையோரின் மேம்பாடடைந்து உயர்வதை விடுத்து, மற்றையோரை அடக்கி ஒடுக்கிச் சிறிதாக்கித் தாம் பெரியோராய் வந்துவிட்டோமெனத் தம்மைப் புகழ்கின்றனர். இஃது எவ்வளவு அநீதியானது!''

நிலைமை இவ்வாறுக, யாழ்ப்பாணத்திலுள்ள பிரமுகர்களின் கண்கள் மாத்திரம் இன்னும் திறபடவில்லை. ஏதோ சாதி சாதி என்று வீணுகப் பெருமையடித்துக் கொள்ளுகிறுர்கள். படித்துப் பட்டதாரிகளானுலும் குருடர்களாகவும் குறுகிய மனப்பான்மையுள்ளவர்களாகவே இருக்கின்றுர்கள். இதனை வெளியுலகோர் அறிந்தால் எள்ளிநகையாடமாட்டாரா? அறிவுள்ள ஒவ்வொரு யாழ்ப்பாணத்தவரும் உண்மைகளை உணர்ந்து காலந்தாழ்க்காது அவற்றைப் பாப்ப முயல வேண்டும். சமூகத்தில் ஒரு பகுதியினரை இன்னும் நாம் தாழ்த்திவைத்திருப்போமாயின் நாம் நாகரிகத்தில் இன்னும் பிற்போக்கான நிலைமையிலே யிருப்பவராவோம். தாழ்த்தப்பட்டவர்கள் என்று விலக்கப்பட்டவர்களுடன் யாழ்ப்பாண வாசிகள் உண்மையிலேயே தொடர்புவைத்துக்கொள்ளாமலிருக்கின்றுர்களா? வெளிவேஷத்தினுல் மாத்திரம் தாங்கள் பெரியவர்களென்று பறைசாற்றுகிறுர்களேயன்றி நடைமுறையில் அவர்கள் தாழ்த்தப்பட்டோரினும் கேவலமாகவேயிருக்கின்றுர்கள். இறைவன் திருச்சன்னிதானத்திலும் ஏற்றத்தாழ்வுண்டா? பழைய — கருத்தற்ற பழக்கவழக்கங்களைக் கட்டிப்பிடித்துக்கொண்டிருப்பது தான் யாழ்ப்பாணத்தவரின் வாழ்க்கை இலட்சியமா? கிறீஸ்தவர்கள் யாழ்ப்பாணத்தில் வந்து கலாசாலைகள் ஸ்தாபிக்கவில்லையானுல் தாழ்த்தப்பட்டவரின் நிலைமை இன்னும் எவ்வளவு மோசமானதாயிருந்திருக்கும். இந்துக்களிற் பெரும்பாலோர் முஸ்லீம்களாயும், கிறீஸ்தவராயும் மாறிச் சின்னுபின்னமேற்பட்டதற்குச் சாதிக்கட்டுப்பாடு தானே முக்கிய காரணம்.

இந்தியத் தலைவர்களை வாயாரப் போற்றுகின்றேம். செய்கையில் எதனையும் காட்டுகின்றேமில்லை. எங்களை வழிப்படுத்தத் தகுதிவாய்ந்த தலைவர்களுமில்லை. தங்களைத் தலைவராக்கிக் கொண்டவர்களும் இதைப்பற்றிச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. தேர்தற்காலம் வரும் போதுமாத்திரம் தாழ்த்தப்பட்டவர்களிடமும் தாழ்ந்து பணிந்து போவார்கள்; தாழ்த்தப்பட்டவர்களின் விமோசனத்துக்காக அவர் யாதும் இதுவரை செய்யவில்லை.

பதுளையிலுள்ள சைவபரிபாலன சங்கம் சென்ற வருடாந்தக் கூட்டத்தில் ஹரிசனங்களை இந்துக் கோவில்களுள் அனுமதிப்பதற்கேற்ற வகையிற் பிரதிநிதிகள் சபைமூலமாகச் சட்டமியற்றுவதற்கு ஆவனசெய்யவேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றி அங்கத்தவர்களில் முக்கியமாக இந்துக்களுக்கு அனுப்பியது. மாசங்கள் பல கழிந்துவிட்டன. ஆக இரு இந்து அங்கத்தவர்கள் மாத்திரம் தீர்மானம் கிடைத்ததாகவும், வேண்டியன செய்வதாகவும் அறிவித்துள்ளனர். யாழ்ப்பாண அங்கத்தவர்கள் நாட்டின் வளர்ச்சியில் எவ்வளவு கவனமுள்ளவர்களாக இருக்கிறுர்களென்பதைப் பாருங்கள்!

இவற்றைவிடத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் செய்யவேண்டிய கைங்கரியங்கள் பலவுள. அவ்வகுப்பினருள்ளும் பலர் உண்மையில் தாங்கள் தாழ்ந்தவர்களென்றே நம்புகிறுர்கள். இது மிகவும் பரிதாபகரமானது. தாங்கள் எவ்வகையிலும் தாழ்ந்தவர்களல்லர் என்ற மனேதிடமும்ஒற்றுமையும் அவர்களுக்குஏற்படவேண்டும்.

யாழ்ப்பாணத்துப் பெரியோர்கள் இவற்றை நன்கு சிந்தித்து வேண்டிய முயற்சி செய்வார்களா? தேசீய சேவா குருவாய்த் திருவவதாரஞ்செய்த அண்ணலை நினைந்தாவது இந்துக் கோயில்கள் யாழ்ப்பாணத்தில் ஹரிசனங்களுக்காகத் திறந்துவிடப்படுமா? கடைசி ஒரு கிராமத்துக் கோயிலிலாவது இப்புனித கைங்கரியம் நடைபெறுமா?

காந்தீயம் வாழ்க!

---

## அளவெட்டி சைவ வாலிபர் சங்கம்

ஆடி மாதம் 27-ந் திகதி (11-8-48) புதன்கிழமை அளவெட்டி கும்பழாவளை விநாயகராலயத்தில் சுந்தரமூர்த்தி நாயனுர் குருபூசை நடைபெற்றது.

குருபூசைத்தினத்தன்றிரவுருப் பிளான் இசைவல்லார் திரு. எஸ். செல்லத்துரை அவர்களால் ''தொண்டர் தொகை தந்த அண்டர் நாயகன்'' என்னும் பொருள் பற்றி ஓரினிய கதாப்பிரசங்கம் நிகழ்த்தப்பட்டது.

— கடிதம்

சிறந்த பலனுக்கு

C. C. C. புகையிலைப்பசளை

கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனியார்

இரண்டு விதமான வெவ்வேறு கலவைகள் எங்களால் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படுகின்றன. ஒன்று சப்புகிற புகையிலைக்கு வேண்டிய மாதிரியிற் பிரத்தியேகமாகக் கலவை செய்யப்படுகிறது. மற்றது சுருட்டுப் புகையிலை அல்லது குடி புகையிலைக்கு வேண்டிய மாதிரியில். இவ்விரு கலவைகளும் தோற்றத்தில் அதிக வித்தியாசமுடையவை. கமக்காரர்கள் தங்கள் தேவைக்கு எழுதும் போது தாங்கள் பசளையிடப்போகும் புகையிலை (மேலேகாட்டிய) எந்த வகையைச் சேர்ந்ததென விபரமாகக் கூறவேண்டும்

C. C. C.

கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி லிமிற்றெட்

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றியவிபரங்களுக்கு உடனே எழுதவும்.

The Colombo Commercial Company LIMITED.

INCORPORATED IN GREAT BRITAIN LIABILITY OF MEMBERS Ltd.

(8473)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு கன்னிகைகள்

தும்பளை, பண்டிதர்
கே. எஸ். ஆனந்தம்

கன்னிகைகள் இருவரை வாசகர்களுக்கு முன் கொண்டு வந்து நிறுத்திச் சங்கநடையையும் பிற்கால நடையையும் இக் கட்டுரையாளர் புதுமைப் பொலிவுடன் ஆராய்ந்துள்ளார். —ப-ர்.

கற்பனைத் தடாகத்தின் இரு மருங்கிலும் புதுமைப் பொலிவுடன் இரு மலர்கள் மலர்ந்திருக்கின்றன. நாணம் அதரத்துப் பூப்ப, இடை சரிந்த இரு கன்னிகைகள் தோன்றுகின்றனர். ஒருத்தியோ சிங்கார அலங்காரியாகக் காணப்படுகிருள்; மற்றவள் அலங்காரமறியாப் பேதையாகக் காணப்படுகிருள். அலங்காரியோ கை நிறைய வளையல்களணிந்திருக்கிருள்: காதிலே அசையும் காதணிகள் இமைக்கின்றன. மார்பத்திலே உருளும் முத்துமாலை நகைக்கின்றது; அரையிலே மேகலை இழைந்து தொங்குகின்றது; அழகிய பட்டாடை வசீகரத்தின் எழிலைப் பொலிவிக்கின்றது. ஆனல் மற்றவளின் கையிலோ வளையல் இல்லை; காதிலே காதணியில்லை; மேகலையில்லை; ஆர்க்கும் சிலம்புகள் இல்லை; கழுத்திலே ஒரு முத்துமாலைதான் அவள் அணி; கட்டியிருக்கும் சேலையுமோ வேலைப்பாடற்ற வெள்ளைத் துணி.

## கலைத்துறையில்

ஆனல் யார் இதில் அழகிபென்று நம்மால் தெரிந்தெடுக்கமுடியவில்லை: ஆபரணத்தாலும், ஆடையாலும், வசீகரத்தைப் பொலிவித்து இயற்கையழகுக்கு இலாவண்யம் கொடுக்கும் அவள் அழகியா? அன்றிச் செட்டாக ஒரு முத்துமாலை அணிந்து இயற்கைக்கு மோகனந் தீட்டும் அவள் அழகியா? நாம் மாறி மாறி இருவரையும் பார்க்கிறோம்! ஒருபார்வைக்கொருபார்வை இருவரும்மேம்பட்ட அழகிகளாகத் தோன்றுகின்றனர்.

கலையிலும் இத்தகைய இரண்டு அழகுகள் தோன்றுகின்றன. இசை, ஓவியம், சிற்பம், இலக்கியம், நடனம் இவையெல்லாவற்றிலும் இவ்விருவித அழகுகளும் தோன்றுகின்றன. சங்க இலக்கியங்களையும் பிற்கால இலக்கியங்களையும் எடுத்து நோக்கினுல் இவ் விருவித அழகுகளும் நன்கு புலனுகின்றன. ஒன்று அலங்காரத்தாற் சோபிக்கும் ஒரு இலாவணியம். மற்றது எளிமையினுல் வரும் ஒரு கவர்ச்சி. நம் இருதய தந்திகள் அவ்விரு அழகினுலும் மீட்டப்படும்.

## காவியத்திலே

கம்பன் சிருட்டித்த மிதிலாபுரியும், சித்திரகூடமும், பஞ்சவடியின் குளிர்ந்த பசுங் காட்சியும் நம்மை வசீகரிக்கின்றன. வீமன் எழுந்து ஆத்திரத்தோடு கண்ணன் முன்பு தருமனை அண்ணனென்றும் பாராது 'ஊனமிலான் மானமிலா' துரைப்பதற்கு என்று வையும்போது அவன் கடைவாயிலே ஆத்திரத்தாற் கக்கும் நுரையையும் கோபக் கனலையும் காண்கிறோம். இளம் பேய்க்குந் தோன்ரு இருளிலே செல்லும் நளனையும் தமயந்தியையும் காண்கிறோம். ஆனல் அவர்களை எப்பொழுதாவது நாம் வாழ்க்கையிற் கண்டதுண்டா? மனித உலகத்திற்குச் சற்று இறங்கி வந்து பார்ப்போம். இந்திர தனுசு வில்லைப்பெயர்த்தெறியும் வஸ்தாதுகளைக் காண்கிறோம். அங்கே இராமனின் அழகைக் காணவில்லையே; தந்தையாருக்காக ஆவியை அர்ப்பணித்த மகா தியாகிகளைக் காண்கின்றோம். ஆனல் உடல் மெலிந்து வீரம் குடிபோய்ச் சூப்பியிருக்கின்றன, அவர்கள் தோள்கள். சோலையிலே புருவையும், கிளியையும் கொஞ்சிச் சீராட்டி இருக்கிறோம். ஆனற் செம்மனத்தான் தண்ணளியான் என்று போய்த் தூது சொல்வதாக இன்னும் கேட்கவில்லையே. சீதையைப் போன்ற அழகிகளையெல்லாம் வேசிகள் வீதியிலே சாளரத்திலல்லவா காண்கிறோம்? நம்முடைய உற்ருர் பெற்ருரிலே இராமனைத் தேடலாமா? நம்முடைய சகோதரர்களிலே அருச்சுனனைத் தேடலாமா? ஆமாம்; காவியத்திலே அவர்களையெல்லாம் நம்முடைய உற்ருராகக் கொண்டாடினுேமே; ஆனல் நிஜ உலகத்திற்கு இறங்கியவுடன் ஏன் வீமன் மறைகிருன்; சீதை மறைகிருள்.

## ஒரு மயக்கம்

கவிஞன் நம்மைச் சுற்றி ஒரு கனவுலகையல்லவா சிருட்டிக்கிருன். நம்மால் எட்டிப் பிடிக்க முடியாத ஒரு உலகத்து மாந்தரின் நாவிலல்லவா நம்மைக் கொண்டுபோய் விடுகிருன். விழித்திருக்கும் நம்முடைய கண்களைக் காவிய மையைப் போட்டு மந்திரத்தால் மயக்கி ஒரு உலகைச் சிருட்டித்து நம்முடைய இன்ப துன்பங்களையெல்லாம் அதிலே அனுபவிக்க விடுகிருன். கனவினுலாகிய பனிதரையெல்லாம் நம்மோடு தோள் தட்டும் உறவினராக்கி வைக்கிருன். ஆனல் நம் நிஜவாழ்வுக்கு இறங்கியவுடன் மாளிகைச் சுவர்களெல்லாம் ஆகாயத்திலே கரைந்து விடுகின்றன. வீமனும் அருச்சுனனும் கண்ணுக்கெட்டாத தூரத்திலே மறைகிருர்கள்! யார், கவிஞனு நம்மை மயக்கிவைத்திருந்தான்.

இம் மயக்கத்துக்கு இடங்கொடுத்தது நம் மனமல்லவா? உண்மையற்ற கனவாயினும் அதிலே ஊறும் தேனின் இன்பத்தை யனுபவிக்க அல்லவா நம்மை நாமே மயக்க இடங்கொடுக்கிறோம். கற்பனையிலே தேடும் மகா புருஷர்களைக் கண்டு பேசுதற்கல்லவா கவிஞன் தரும் இன்ப நித்திரையிலே கண்களை மூடுகிறோம்; அழகு அழகு என்று வாயூறுகிறோம்; ஆனல் அது பொய்த் தோற்றமென்று எப்போதாவது மனித ஜாதி வெறுத்ததுண்டா? இத்தனை பரம்பரையும் இராமாயணத்தையும் பாரதத்தையும் படிக்கிருர்கள் தானே; அத்தனை சந்ததியும இலகுவாக அந்த மயக்கத்திலே ஆழ்ந்தார்கள் தானே; இன்னும் ஆழ்கிருர்கள் தானே. இதன் மாயமென்ன?

## இலக்கியச்சோலை

இனி, சங்க இலக்கியச் சோலையிலே புகுந்தாற் கற்பனை வீரர்களும் மகளிரும் நம் கண்முன்னே இல்லை. என் வீட்டுச் சமையலறையே அங்கேயும் தோன்றுகின்றது. நான் நேற்றுப் பார்த்துவிட்டு வந்த கடற்கரையும் கைதையும் ஞாழலும் நண்டுகளுமே அங்கே தோன்றுகின்றன. சாளரத்தைத் திறந்துவிட்டால் தோன்றும் வெளியும் தனிமரமும் அதன் முறிந்த இரு கொம்பருமே நம்மைச் சூழுகின்றன,

"பசுசினை தாழ்ந்த பயிலிண
ரெக்கர் அவரும்
பெறுகுவர் மன்னே"

என்ற அடிகளுக்கு இலக்கியம் எங்குதான் நாம் காணவில்லை. இலங்கை வேந்தன் நகரெல்லாம் வானளாவிய கூடங்களும் கோபுரங்களுமே. மிதிலாபுரியெங்கும் பாட்டும் கீதமும் கிளியின் கொஞ்சலுமே. நிடதநாட்டுச் சோலையெங்கும் பூவும், கிளியும், ... வும், மயிலுமே. ... விசுவ ... நன்றலே. ஆனல் சங்க இலக்கியங்களிலோ நாம்பெ ... ழுந்தலறிய நிரம்பா மென் ருேட்கிழவியையும், யானையின் துதிக்கையை யொத்த பின்னலையுடைய பெண்களையும், முளிந்த ஓமையையும், சரிந்த கான் யாற்று மணல்வரியையும் காண்கிறோம். குளிர்காற்று வீசுகிறது. தென்றல் தவழ்கின்றது. சமையலறையிலே காந்தள்விரலால்தயிர்பிசைந்து, புகையால் கண்கலங்கும்பெண் நமது உறவினள் அல்லவா.

## புதிய கண்

இதெல்லாம் நாம் காணும் காட்சிகள்தானே. இதைக் கவியிற் காணும்போது மாத்திரம் ஏன் நம்மை அவைகள் ஆட்கொள்கின்றன. பரந்த மணல்வெளியிலே முளிந்த தனியோமையை முன்பெல்லாம் கண்டிருக்கிறோம். ஆனல் அப்பொழுதெல்லாம் வீட்டு அல்லல்களைப்பற்றி ஏதேதோவெல்லாம் சிந்தித்துச் சென்றோமேயன்றி நம் கண்ணுக்குக்கூட அது புலனுகவில்லையே. ஆனல் என்ன ஆச்சரியம்! கவியிலே நம்மை அது ஆட்கொள்கிறதே! அடிசுடும் கனல் வேளையிலே நிற்க நிழலின்றி ஓடும் மான்களைக் காண்கிறோம். அவையெல்லாம் நமக்கு அப்பொழுது வெறும் சப்பென்ற காட்சிகளாகவல்லவா தோற்றுகின்றன. ஆனல் கவிஞன் சொற்களிற் சித்திரமாகும்போது நம் மனத்தந்தியிலே அவை நாதம் செய்கின்றனவே. இயற்கையின் காட்சிகள் இவ்வளவு சாதாரணமாக நம்மைச் சுற்றி இருந்தபோதிலும் கவிஞன் காட்டும்போதுதான் அவை நமக்கு அழகாகத் தோன்றுகின்றனவே. அதன் காரணமென்ன? அவன் நமக்கு ஒரு புதிய கண்ணைத் தருகின்றுன்.

## எளிமையும் தெளிவும்

ஒரு காட்சியையே சொல்லுமவகையிற் சங்க இலக்கிய முறையும், பிற்கால முறையும் பேதமுடையவையே. எடுப்பின்றி வேலைப்பாடின்றி எளிமையும் தெளிவும்பட அவை நேரடியாய் வருகின்றன. சுற்றிச் சுழன்று வருவதில்லை. சமத்திய வர்ணனைகளுமில்லை. எளிமையும், தெளிவுமே உயிர்நாடியாகக் கொண்டு அவை தோன்றுகின்றன. அவைகட்கு உள்ளத்தை வெடுக்கென்று தட்டியெழுப்பி உலாவச் செல்லும் தன்மையில்லை. தாமரையிலே இருக்கும் மெல்லிய தெவிட்டாத நறுமணம்போல் அவைகளின் அழகும் எளிமையாய் நம்மை மெதுவாக ஈர்த்து ஆட்கொள்ளுகின்றன. ஆனல், பிற்கால இலக்கியங்களோ எடுப்பாக வேலைப்பாடுகளோடு அழகை வனைகின்றன. செண்டுகள், சுருள்கள், கொடிகள் இவைகளால் அலங்கரிப்பதுபோற் கவியை அலங்கரிக்கும்பான்மை அவ்விலக்கியங்களிலே நிறைய இருக்கின்றன.

ஆனல், இவ்விருவகைகளில் எது மேம்பட்ட அழகுடையது; எளிமையின் கவர்ச்சியா? அலங்காரத்தின் இலாவணியமா? ஆரம்பத்திலே நமது கற்பனைத் தடாகத்திலே தோன்றிய கன்னிகைகளில் யார் அழகி?

## காதற்பண்பு

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும்
எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந்
தாங்கலந் தனவே.

இதைவிடக் காதலின் மாண்பை எளிமையாகச் சொல்லவே முடியாது. காதற் சிறகுகளிலே பறந்து, காவல் புரியும் அரண்களையும் மதில்களையும் கடந்தேன்; உனது கண்களாகிய வாள்களைக் கண்ட யான், காவல் புரியும் போர்வீரரின் வாள்களுக்கு அஞ்சுவேனு? என்று ஒரு காதலன் பேசுகிருன். சந்திரோதயம் அனலாய்ச் சுட்டதென்றும், தென்றல் நெருப்பாய்க் காய்ந்ததென்றும் காதலின் தாபத்தை இன்னொரு கவி எடுத்துரைக்கிருர்.

(தொடர்ச்சி 10-ம் பக்கம்பார்க்க)

# ஈழநாடே கேள்!

முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி

('வெண்ணிலாவே' என்றமெட்டு)

வளத்திலே சிறந்துநின்ருய் ஈழநாடே! — கண்டோர்
வாழ்த்திலே உயர்ந்துநின்ருய் ஈழநாடே
உளத்தினைக் களிக்கவைக்கும் ஈழநாடே — இன்றேன்
உணர்வுசோரும் மக்களின்ருய் ஈழநாடே!

செழுமைகொண்ட நிலமமைந்த ஈழநாடே—பிறரைத்
தேடிநீ இரப்பதென்ன ஈழநாடே
உழவிலே சிறந்துநின்ற ஈழநாடே—இந்நாள்
ஊணிலாது வாடலென்ன ஈழநாடே.

வேற்றுநாட்டுக் குணவளித்த ஈழநாடே — பசியால்
மெலிந்துநின்று கரைவதென்ன ஈழநாடே
சோற்றிலே வளர்ந்துநின்ற ஈழநாடே — இன்று
சோறிலாது தாழ்வதென்ன ஈழநாடே.

வெளிமினுக்கில் மயங்கிநிற்கும் ஈழநாடே — முன்னேர்
வெற்றிவாழ்க்கை மறந்துவிட்டாய் ஈழநாடே
தெளிவுனக்கெந் நாள்வருமோ ஈழநாடே — மேலைத்
தேயவாழ்வில் மோகங்கொண்டாய் ஈழநாடே.

பருத்தியை வளர்த்திடலாம் ஈழநாடே — வேண்டும்
பயிரையெல்லாம் செய்திடலாம் ஈழநாடே
விருத்தியாகக் கைத்தொழில்கள் ஈழநாடே — நமக்கு
வேண்டியன செய்திடலாம் ஈழநாடே.

ஒற்றுமை குறைந்துநின்ருய் ஈழநாடே — பேதம்
ஓங்கிடக் குலங்கள்சொல்வாய் ஈழநாடே
முற்றிலும் சமத்துவத்தை ஈழநாடே — அன்பு
முறுகநீ வளர்த்தல்வேண்டும் ஈழநாடே.

காலச்சக்கரம்
வாரப்பத்திரிகை
தபாற்பெட்டி 232 :: கோயமுத்தூர்
ஆசிரியர்கள் :
ம. ப. பெரியசாமித்தூரன், கே. எஸ். பெரியசாமி

ஆகஸ்ட் 15 லிருந்து அழகிய புதுத் தோற்றத்தில் வெளியாகி வருகிறது. அகிலன், துணைவி என்ற தொடர் கதையை ஆரம்பித்துள்ளார். சுவாமி சித்பவானந்தஜி, 'சுகி', இராஜ-அரிய... ... ம் ஆகியவர்கள் தொடர்ந்து எழுதுகிருர் ... பல புதிய அம்சங்களோடு வெளிவருகிறது. ... நிருபர் இலங்கைக் கடிதம் எழுதுகின்ருர்.

இலங்கையில் ஏஜண்டுகள் :

...த்தையா
புத்தகசாலை
...ாப்பல் வீதி
...ழ்ப்பாணம்
...AFFNA

(CEYLON)

மெஸர்ஸ் பாரதி நிலையம்
நியூஸ் ஏஜன்ட்ஸ் &
புத்தக வியாபாரிகள்
மட்டக்களப்பு
BATTICALOA

தனிப்பிரதி விலை அணு 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகித் தெய்வமும் - - - இளங்கோவடிகளும்

சென்றவாரத் தொடர்ச்சி

**பாண்டிமாதேவி போன்று**

கண்ணகி தேவியும் தன் கணவனோடு உடனுயிர்துறந்திருந்தால், அவர் பெண்மையைச் செய்தவராவர். அவ்வாறன்றி மதுரையை அழித்தமை பிழைபாடுடையது. ஆதலின் கண்ணகி தேவியினும் பாண்டிமாதேவி சிறந்தாளென்பது பண்டிதரவர்களது வாதங்களுளொன்று. இதனையும் ஒரு சிறிதாராய்வாம்:

பாண்டியன் ஆராய்வின்மையால் தனக்கும் தன் குலத்துக்கும் தன்னுட்டிற்கும் அழிவைத் தேடியவன். அவனழிவிற்கு அவனேயன்றிப் பிறிதொருவருங் காரணரல்லர். அவன் சென்றவழிச் சேறல் அவன் கற்புடை மனைவியின் கடன். இது தலையாய கற்புடை மகளிரின் இயல்பெனப்பட்டு, இலக்கண வரம்பு பெற்றுப், பண்டுதொட்டு உலக வழக்குச் செய்யுள் வழக்கு இரண்டிலும் பெரிதும் பயின்று வருவது. இன்றுங்கூடக் கணவனிறந்தானெனக் கண்டு உடனுயிர் துறக்குங் கற்பரசிகள் பலரின் செய்திகளை இடையிடையே கேட்கின்றோம். இதிற் புதுவது யாது?

கோவலன் தன்னழிவைத் தானே தேடினனு? இல்லை. ஆக்கம் வேண்டியே மதுரைக்கு வந்தான். "சிலம்பு முதலாகச் சென்ற கலனோ டுலந்த பொருளீட்டுத லுற்றேன் மலர்ந்தசீர் மாட மதுரை யகத்துச் சென்று" என்று கூறிக்கொண்டுதான் மதுரைக்குப் புறப்பட்டான். மதுரையில் அவனை யறிந்தார் ஒருவருமிலர். அவ்வூருக்கு அவனோரனாதை. கள்வனெனப் பழிக்கப்பட்டுக் கொலைஞன் வாள் நிழலின்கீழ் நிற்கின்றான். கள்வனென்ற பழிச்சொல் பெருமகனை அவனுக்குத் திலகப்பூட்டி அவனை ஊனமையாக்கிற்று.

பாண்டிய அரசர்களுடைய செங்கோன்மையைப்பற்றி அவன் நிரம்பக் கேள்விப்பட்டிருந்தான்:

"அரவுஞ் சூரும இரைதேர் முதலையும்
உருமும்சார்ந்தவர்க் குறுகண்செய்யா
செங்கோற்றென்னவர் காக்குநாடென
எங்கணும் போகிய இசையோ பெரிதே"

என்று தன் பத்தினிக்குக் கூறி இராவழி அழைத்து வந்தவன். இவ்வாறெல்லாம் அவன் பெருமை பேசிவந்த நாட்டிற்றான் கள்வனெனப் பழிப்பட்டுப் பேச்சற்று நிற்கின்றான. கொலைஞன் வாள் அவனுடம்பை ஊடுருவுகின்றது. இரத்தம் நாற்றிசையும் பீறிப் பாய்கின்றது. அவ்விரத்தப் பெருக்கின்மீது அவனுடல் துவண்டு வீழ்ந்து துடித்து ஒய்ந்தது. இந்நிலையிலேதான் கண்ணகிதேவி தன் கணவனைக் காண்கின்றாள்.

இனிப் பாண்டிமாதேவி, "யானோ அரசன் யானே கள்வன் மன்பதை காக்கும் தென்புலக் காவல், என்முதற் பிழைத்தது கெடுகவென் னுயுள்" என்று தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு, தன் கண்முன்னேயே அரசுகட்டிலிலிருந்தபடியே உயிர் துறந்த அரசனைக் காண்கின்றாள். இவ்விருவாது காட்சிநிலையையும் கூர்ந்து அவதானிக்குமாறு ஆராய்ச்சிவல்ல அறிஞர்களைத் தபவாய் வேண்டிக்கொள்கின்றேன்.

இக் காட்சி நிலையினையும், கொண்டானே கண்கண்ட தெய்வமெனக்கொண்டொழுகும் பெண்ணியலினையும், ஒருசேர வைத்துப் பண்டிதரவர்கள் ஊன்றி ஆராய்ந்திருப்பாராயின், கண்ணகிதேவி செய்தது பிழையென்று சொல்ல அவரது அறிவு இடங்கொடாது. அதற்கு மாருகத் தீயோரையன்றி நல்லோரையும் சேர்த்து மதுரைமாநகரை ஆயிரந்தாஞ் சுட்டாலும் தகும் என்ற முடிவுக்கு ஒருகால் வருதலும் கூடும்.

கோவலனைக் கொலையூழ் இவ்வாறு அவமே கொன்றது என்று வாதிக்கின் அவ்வாதமும் கண்ணகிதேவி பக்கமே நியாயமுண்டு எனக் காட்டும். என்?

"ஆடித் திங்கட் பேரிருட் பக்கத்து
அழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று
வெள்ளி வாரத் தொள்ளெரி யுண்ண
உரைசால் மதுரையோ டரைசு கேடுறும்"

என்பதோரூழ் மதுரைமாநகருக்கும் அரசனுக்கும் உண்டாதலின், அவ்வூழே அரசனைக் கெடு

சுன்னாகம்

**அ. வெற்றிவேற்பிள்ளை**

த்து மதுரையை எரித்தது; கண்ணகியன்று என்றாகும்.

பாண்டியனும் தேவியும் உயிர் துறந்தமையைக் கண்டே கண்ணகிதேவி ஆறவேண்டுமென்பது பண்டிதரவர்களது உள்ளக்கிடக்கை. பாண்டியன் கண்ணகியை ஆற்றுதற்காக உயிர் துறக்கவில்லை; தன் குலத்துக்குற்ற பழியை நீக்கவே உயிர்துறந்தான். அன்றியும் உலக பாலர்களாகிய இரு பிரத்தியட்ச தெய்வங்களாகும். சூரியனும் அக்கினியும், கண்ணகிதேவி மதுரையைத் தகித்தல் முறையுடைத்தே எனச் சான்று கூறி அப் பத்தினித் தெய்வத்திற்கு உதவினர்.

"கள்வனோ வல்லன் கருங்கயற்கண் மாதராய்
உள்ளெரி யுண்ணுமிவ் வூர்"
(சூரியன்)

"நீல நிறத்துத்
திரிசெக்கர் வார்சடைப்
பால்புரை வெள்ளெயிற்றுப்
பார்ப்பனக் கோலத்து
மாலை யெரியங்கி
வானவன் தான்தோன்றி
மாபத்தினி நின்னை
மாணப் பிழைத்தநாள்
பாயெரி இந்தப்
பதியூட்டப் பண்டேயோர்
ஏவ
லுடையேனல்
யார்பிழைப்பா ரீங்கென்ன"
(அக்கினி)

"பார்ப்பா ரறவோர்
பசுப்பத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி
யெனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே
சேர்கென்று காய்த்திய
பொற்றொடி யேவப்
புகையழல் மண்டிற்றே
நற்றேரான் கூடல் நகர்"

இ·திங்ஙனமாக "ஒருபொழுதும் வாழ்வதறியா" மக்களாகிய நாங்கள் தெய்வ முடிவிற்கும் அப்பாற் சென்று குறைகாணுதல் நம் அறியாமையே யன்றிப் பிறிதியாது?

கண்ணகிதேவி பாண்டிமாதேவி இவ்விருவரினும் யார் சிறந்தாரென்ற சேரன்செங்குட்டுவனது வினவிற்கு விடையிறுக்குமிடத்துச் சேரமாதேவி "இப் பத்தினிக் கடவுளைப் பரசல்வேண்டும்" என்கின்றார். பாண்டிமாதேவியாரைக் கண்ணகிதேவியோடு ஒப்பத்தானும் சேரமாதேவி நினைத்திருப்பாராயின் அவர்க்கும் ஓர் கோவிலமைத்துக் கண்ணகிதேவியோடொப்பப் பூசித்தலில் அவர்க்கு ஓர் முட்டுமின்று. எனவே கண்ணகிதேவி பாண்டிமாதேவியினும் பூசிக்கத் தக்கவரென்றே சேரமாதேவி கொண்டாராயிற்று. இம் முடிவே பத்தினிப் பெண்டிர் அனைவர்க்கும் ஒப்பமுடிந்ததாயிற்று.

பாண்டியன் நெடுஞ்செழியன் இறந்தபின் கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் என்னும் பாண்டியன் மதுரைக்கு வந்து கண்ணகிதேவிக்குக் கோவிலமைத்துப் பலியூட்டி வழிபட்டு மதுரையை முறைதவருது பூசி புரிகின்றான். இதனுற் கண்ணகிதேவி "கோமுறைநீங்கக் கொடிமாடக்கூடலைத்தீமுறைசெய்தது" சரியென்று பாண்டியனே ஒப்பினனுயிற்று. இதன்மேலும் கண்ணகிதேவி செய்தது முறையன்று என்ற பண்டிதரவர்களது வாதத்திற்கு இடமுண்டா?

கோவலன்:- பண்டிதரவர்கள் கோவலனைப்பற்றிக் கூறுமிடத்து "முற்பிறப்பில் இவனொரு கொலைஞன், கண்ணகி இக்கொலைக்காரன் மனைவி, இப்பிறப்பில் இவ்விருவரும் கதாநாயகர்கள். எப்படி இருக்கிறது நாடகம்" என்று கூறிச் சிலப்பதிகாரத்தையும் இளங்கோ வடிகளையும் நையாண்டி செய்கின்றார்கள்.

பண்டிதரவர்களுக்கு மாபாரதங் தீர்த்த திருவிளையாடற் கதாநாயகனைமட்டும் ஞாபகப்படுத்தி அப்பாற் செல்கின்றேன். சிங்கபுரம் கபிலபுரம் என்னும் இரு தேசங்களிலுள்ள அரசர்களிடையே யுத்தம் நடைபெறுகிறது. இருதேசங்களிடையேயும் போக்குவரவு செய்வாரிலர். சங்கமன் என்னும் ஒரு வாணிபன் மாத்திரம் பொருளீட்டும் ஆசையால் கபிலபுரத்திலிருந்து சிங்கபுரத்திற்கு ஒளித்துவந்து வியாபாரஞ் செய்கின்றான்

"அரும்பொருள் வேட்கையில்
பெருங்கலன் சுமந்து
கரந்துறை மாக்களிற்
காதலி தன்னெடு
சிங்கா வண்புகழ்
சிங்க புரத்தினோர்
அங்காடிப்பட் டருங்கலன்
பகரும் சங்கமன்"

இவனைச் சிங்கபுரத்தாசன் ஐந்தாம் படை ஆசாமி என நினைத்து யுத்ததரும முறைப்படி கொல்கின்றான். இக்கொலைக்கு முற்பிறப்பில் பரதன் (கோவலன்) என்னும் அரசசேவையாளன் பெரிதும் காரணமாகின்றான். இக்கொலைக்குச் சங்கமனது பொருளீட்டும் ஆசையும் யுத்த சந்தர்ப்பமும் பெரிதும் காரணமாயிற்று. இப்பிறப்பில் கதாநாயகனுகிய கோவலன் ஒப்புயர்வற்ற வனுக விளங்குகின்றான். அவனது சிறப்புக்களையெல்லாம் இங்கு விரிக்கவில்லை. ஒன்றுமாத்திரம்; பத்தினி ஒருத்தியின் திறத்துத் தீங்குசெய்த ஒரு தீயோனைக், காவிரிப்பூம் பட்டினத்துள்ள தீயோரை அறைந்துண்ணுஞ் சதுக்கப்பூதம் பற்றியது. அத்தீயோனது தாய்படும் வருத்தங்கண்ட கோவலன் சதுக்கப்பூதத்திடம் சென்று என்னுயிர் கொண்டு இவனுயிர் தருக என்கின்றான். அதற்கு அப்பூதம்,

"நரகனுயிர்க்கு நல்லுயிர்கொண்டு
பரகதி இழக்கும் பான்மையீங்கில்லை"

என்று கூறி அத்தீயோனை அறைந்துண்டது. அவனது தாயை ஆற்றி எண்ணற்ற திரவியங்களையும் ஈந்து கோவலன் காக்கின்றான். என்னே அவனது சால்பு.

"இன்னு செய்தார்க்கும் இனியவே [செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்து மாதவிபாற்பட்டமைக்கு ஊழே முதற்காரணமாயிற்று; அன்றிப் பரத்தமைப்பட்டொழுகும் இழிகுண இயல்பினன் அல்லன். இவன் மாதவியை முதன்முதல் அறிந்து காதல் கொண்டமைக்கு அக்கால வழக்காறென்றுங் காரணமாகின்றது, அது ஆடரங்கேறும் நாடக மகளிர்க்கு அரசகுமார் அல்லது பாதகுமார் அணிபுனைந்து மகிழ்வித்து அரங்கேற்றுதலாம்.

## இலக்கிய அரங்கம்

ஆடரங்கேறிய நாடக மகள் அநங்க மாலைக்குப் பரதகுமாரனுயிருந்த சீவகன் அணிபுனைந்து மகிழ்வித்து அரங்கேற்றினுன் என்பதையும், அதனுல் அவள் அவன் மீது ஆராக்காதல் உற்ருள் என்பதையும் சிந்தாமணியிற் காண்கின்றோம்.

"நிலமறிந் தணிக வையன்
சீவக னெறியி னென்ன
நலநுதற் பட்டங் கட்டி
நகைமுடிக் கோதை சூட்டி
அலர்முலைக் குருதிச் சாந்து
மாரமும் பூணுஞ் சேர்த்திக்
குலவிய குருதிப் பட்டிற்
கலைநலங் கொளுத்தி யிட்டான்"

"திருவிலே சொரிந்து மின்னுங்
குண்டலஞ் செம்பொ னேலை
உருவுகொண் மதிய மன்ன
வொளிமுகஞ் சுடர வாக்கிப்
பரியகஞ் சிலம்பு செம்பொற்
கிண்கிணி பாதஞ் சேர்த்தி
அரிவையை யரம்பை நாண
வணிந்தனன் அனங்க னன்னுன்"
(காந்தருவதத்தையாரிலம்பகம்)

இவ்வாறே ஒப்புயர்வற்ற பாதகுமாரனுகிய கோவலனும் மாதவி அரங்கேறும் சமயத்து அணிபுனைந்தமையால் ஒருவர் மீதொருவர் காதல் கொண்டு உடனுறை வாழ்க்கை யெய்தினராகலாம். இளங்கோவடிகள் இவ்வணி புனையுஞ் சடங்கைப்பற்றி ஒன்றுங் கூறிற்றிலர். மாதவி ஒரு பின்முறை வதுவை மகளிர் போன்று கற்புக்கடம் பூண்டு ஒழுகிய வரலாறு நூலெங்கும் பரந்து கிடக்கின்றது. கோவலன் இறந்தானெனக் கேட்டுத் தானுந் துறவுபூண்டு தன் மகள் மணிமேகலையையும் இளமையிலேயே துறவு படுத்தியமை அவளது கற்பினியல்பிற்குச் சான்ருகும்.

# ஆனந்தச் சுக வாழ்வு

யுத்த காலத்திற் சத்தற்ற உணவை உட்கொண்டு உரம்பெற்ற இலங்கை மக்கள், சுதந்திரமடைந்த வரலாற்றைஇவ்வாரம் படிக்கின்ருேம். ஜாக்கஸ் ஆங்கிலத்தில் எழுதும் இவ்வாராய்ச்சி டைம்ஸ் ஒவ் சிலோன் என்ற ஆங்கிலப் பத்திரிகையின் வார இதழில் வெளியாகின்றது.

ஸ்ரீலங்காவின் நீடித்த காலச்சரித்திரம் முக்கியநிகழ்ச்சிகள்நிறைந்ததொன்ருகும். அதே சமயத்தில் அங்கு பிறந்தவர்களின் தொகையும் மிக அதிகமாகவே யிருந்துவந்துள்ளது.

இத்தகைய இருபெருஞ் சிறப்புக்களே நாம் எத்தன்மை வாய்ந்தவர்களென்பதையும், நாம் அடைய விருக்கும் நன்மைகள் யாவை என்பதையும் பளிங்கு போல எடுத்துக் காட்டுகின்றன.

ஒரு காலத்தில், இந்நாட்டிலுள்ள சுகாதாரமந்திரிஒருவர், பிரதிவருடமும் 10 இலட்சம் பிள்ளைகள் நாட்டிலே பிறக்க வேண்டு மெனப் பெரிதும் விரும்பி, அத்துறையில் வெற்றியுமடைந்தார். நாங்கள் இன்னும் அந்நிலையைப் பெறவில்லை. ஒருவன் இறந்தானே, அன்றேல் உயிருடன் தான் இருக்கின்ருனே என்று அறிந்துகொள்ள முடியாத பக்குவத்தில் உலகிடை வாழ்வதற்குச் சிலர் இன்று பிரயத்தனஞ்செய்து வருகின்றனர். இவற்றை அடைந்துகொள்வதற்கு நாங்கள் சலியாது உழைத்தே தீரவேண்டும். இருந்தும் நாங்களும் ஏதோ சில காரியங்களைச் செய்து முடித்திருக்கின்ருேம். இனி, அவை எமக்குப் படிப்பிக்கும் பாடங்களைச் சிறிது ஆராய்வோம்.

### பாலும் மீனும்

பிறப்பு அதிகரித்திருக்கின்றதெனவும், இறப்புக் குறைந்திருக்கின்றதெனவுங் கூறுவது ஆராய்வற்ற பேச்சாகும். நாங்கள் இவற்றையெல்லாம் எப்படிச் செய்துமுடித்தோம்? இவற்றைச்செய்வாறு [illegible] செய்யப் போகின்ருேம்? இக் கேள்விகளே இன்று முக்கியமானவை.

இத்துறையில் யுத்தம் போதிய நன்மை செய்திருக்கின்றதென்பது உண்மைதான். உடம்பைக் குத்தி முறித்து வேலைசெய்தபடியால் வலுப் பெற்ருேம். யுத்தத்துக்கு முன்னர், நாங்கள் எங்கள் உணவிலே சகல ஜீவசத்துகளும் குறைவின்றி யிருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், அதில் நல்ல ஊக்கமெடுத்து வந்தோம். அந்தச்சத்து, இந்தச்சத்து என்று சொல்லி நல்லுணவிலும் சுக வாழ்க்கையிலுங் கண்ணுங் கருத்துமாகவிருந்து வந்தோம். அத்துடன் பாலும் மீனும் உட்கொள்ளும்படி அனைவரும் எங்களைப் பரிந்துகேட்டனர்.

## நவின ஆராய்ச்சி

### பசையரிசி

இப்படியிருக்கையில் யுத்தமும் வந்தது. எமதுசெல்வ நிலை சீர்குலையலாயிற்று. பசுமாடுகள் இறந்துபோகவே பாற்பண்ணைக்காரர் வேறு தொழில்களை நாடினர். நீர் மூழ்கிக் கப்பல்களைக் கண்டு மீன்வகைகளும் ஒளித்துக் கொண்டன. ஆகவே கொள்ளை இலாபமடிக்குங் கள்ளச் சந்தை வியாபாரிகளே கொழுகொழு எனக் கொழுத்தனர். உடுப்புகளுக்குக் கஞ்சி முறுக்கப் பசையின்றி நம்மை நாகரீகமாக்குவோர் தவண்டையடிக்கையில் எகிப்து, பிறேசில் போன்றவிடங்களிலிருந்து இறக்குமதி செய்யப் பெற்ற பசையரிசியை நாம உண்டு களித்தோம். பளிங்குபோன்ற இந்த அரிசி நாட்டிலே புகுந்தவுடன் குங்குமம்போன்ற ஊர் அரிசியின் ஆட்டம் நின்றுவிட்டது. இது யாருடைய வயிற்றை நிரப்பிற்ரே தெரியவில்லை. சுயமரியாதையை விரும்பிய மக்கள் கள்ளச் சந்தைக்குப் பணமிறக்க விரும்பாதபடியால், ஊர் அரிசி இருட்டிற் கிடந்துகொண்டது.

### சுதந்திரம் வந்தது

பால், மீன், ஊர் அரிசி என்பன கிடைக்கவில்லையே என்று எமது உடம்பு இளைத்துப் போகவில்லை. அதற்கு மாருக நாங்கள் உரம்பெற்ருேம்; சுதந்திரம் பிறப்புரிமை யென்று சொல்லி ஆரவாரம் செய்தோம். யுத்த முரசறைந்தே [illegible] திலே சுதந்திரமும் [illegible]

சுதந்திரங் [illegible] யால் மற்று [illegible] தோன்றுமென் [illegible] கின்றது.

நாங்கள் இன் [illegible] சுதந்திரத்திலு [illegible] கமான சுதந்தி [illegible] போகின்ருே [illegible]

(தொடர்ச்சி 8-[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கு இனி நற்காலம்?

## தமிழ்க் காங்கிரஸ் தீர்மானம்

நமது அரசியல் நிருபர்

“இவ்விதமாகக் காடு மேடெங்கும் இராப்பகலின்றி, ஊணுறக்கமின்றி, அலைந்து திரியவேண்டியது அவசியமா”? என்று கேட்டனர், தேர்தலில் ‘கோசு’போன ஒருபழைய மந்திரியார்.

“வேறு என்னசெய்வது? ஆரம்பித்துவிட்டேன். சரியோ பிழையோ கொண்டுசெல்லாதிருப்பது எப்படி? அன்றேல் என் தலைமைக்கு அதோ கதியாகாதா? என்றார் கரணமடித்த காங்கிரஸ்தலைவர்

“நான் இற்றைக்கு மூன்று வருடத்துக்கு முன் எங்கு ஆரம்பித்தேனோ அந்த இடத்திற்றானே நீங்கள் இப்போது ஆரம்பிக்கவந்துள்ளீர்கள்” என்றார் பழையபேர்வழி

“பழையபேர்வழிகள் அனைவரையும் ஓட்டிவிட்டேன். அத்துடன் இப்போது கௌரவத்துடன் ………… சும்மா விடுவேனோ” என்றார் ஒப்பில்லாத் தலைவர்.

* * *

தமிழ்க்காங்கிரஸ் சபையினதும் அதன் தலைவர்களதும் பழைய நடப்புக்களை எடுத்துரைப்பதால் ஒரு பயனுமில்லை. எப்படியாவது தமிழ்க்காங்கிரஸ் நல்வழிப் பட்டது பெரியகாரியமாகும். வகுப்புவாதம் என்னும் பேய நாட்டினின்று ஓட்டப்படுவது விசேஷ செய்தியாகும். எல்லாச் சாதியினரும வகுப்பினரும் ஒத்துழைப்பின் நாட்டின் முன்னேற்றம் எவ்வளவு துரிதமடையும்?

### புதியகட்சி வேண்டும்

இதுவரையும் தமிழ்க்காங்கிரஸ் செய்த அரசியற்றொண்டு நிரம்பவும் போதும. இனி இந்தவகுப்புவாத ஸ்தாபனம் மாற்றி யமைக்கப்பட வேண்டும்; அல்லாவிடின் அரசியல்விஷயங்களில் அது தலையிடாதிருப்பது நல்லது. சன்மார்க்கம், கலாசாரம், பாஷை சமுதாயவாழ்க்கை என்னுந் துறைகளில் தமிழ்க்காங்கிரஸ் அரிய ஊழியங்களைச் செய்து தமிழ்ச்சாதியத்தவரை மேனிலைக்குக் கொண்டுவரலாம். வட இலங்கையில் வாழ்வோர்க்கு அரசியல் ஸ்தாபனம் ஒன்று வேண்டின் யாவர்க்கும் ஒற்றுமையான முறையில் வகுப்பு வாதத்தை முற்றாகப் புறத்தேவிட்டு ஓர் ஸ்தாபனத்தை அமைக்கலாம். அதில் எல்லாச் சாதியினரும் சமயத்தவரும் இடம்பெறவேண்டும். இவ் விஷயத்தைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர்கள் விரைந்து செய்து முடிக்கலாமே

### டோக்டர் நாகநாதன்

டோக்டர் நாகநாதனும் வேறு சிலரும் திரு. பொன்னம்பலமவர்கள்மீது துள்ளிப் பாய்கின்றனர். திரு பொன்னம்பலமவர்களுடன் இவர் இவ்வளவு காலம் கலந்தும் உழைத்தும் பழகியும் இன்னும் அறியாது போனதற்குத் துக்கப்படவேண்டியிருக்கின்றது. அரசாங்கசபையில் திரு. பொன்னம்பல மவர்களுடன் வீற்றிருந்த சேர் துரைசுவாமி, திருவாளர்கள் நடேசன், மகாதேவா, தியாகராஜா, இராசகுலேந்திரன் முதலியோர் துரத்தப்பட்டபோது இவர் எவ்வளவு சந்தோஷமடைந்தார். அவ்வளவுக்கு இப்போது தூக்கப்பட்டால் என்ன தீமை வந்துவிடுமோ? இப்பொழுதுதானும் திரு. பொன்னம்பலமவர்களுடன் கைகோத்துச் செல்பவர்கள் நிச்சயமென்று எப்படிக் கூறுவது. அடுத்த தேர்தலுக்குள் இன்னும் எத்தனை குட்டிக்கரணங்களோ? பதவியை ராஜினாமா செய்துவிட்டு மறுபடி தேர்தலுக்கு முன்வரும்படி டொக்டர் நாகநாதன், பொன்னம்பலத்துடன் சபதங் கூறுகின்றார். இன்னும் அனுபவம் படையாத டொக்டர் வேறு என்னதான் கேட்கமாட்டார்.

### கௌரவத்துடன்.......

“கௌரவத்துடன் நான் ஒத்துழைக்க இணங்கினேன்” என்கின்றார் திரு. பொன்னம்பலம். பிரதம மந்திரியார் திரு. சேனநாயகா அவர்கள் என்ன வாக்குறுதிகள் இரகசியமாகக் கூறினரோ யாரறிவார். ஆனல் டொக்டர் நாகநாதன் என்ன கூறுகின்றார். “எவ்வித உடன்படிக்கையையும் கௌரவ சேனநாயகாவுடன் செய்துகொள்ளாது அல்லது வாக்குறுதியைத்தானும் பெறாது தமிழ்க் காங்கிரஸ் நோக்கங்களில் ஒன்றாயினும் பூர்த்தியடையாமல் திரு. பொன்னம்பலம் மந்திரிப் பதவியை ஏற்க உடன்பட்டது எவ்வளவு சதிமோசமாகும். இவ்வித இழிதரமான சரண்புகுதல், கௌரவத்துடன் ஒத்துழைப்பென எப்படிக் கூறுவது”? இவருடைய வசனங்களே காங்கிரஸ் தலைவரின் பீடிகை யாதென விளக்குகின்றது. இதற்கு மேலாக யாராவது கூற இடமிராது. நண்பர்களை நட்டாற்றில் விடாது அவர்களையும் கரைசேர்க்காது விட்டது இவரின் தவறுதான்.

### ஐக்கிய தேசியக் கட்சி

இக்கட்சியின் பெலம் தமிழ்க் காங்கிரஸ் தீர்மானத்துடன் பன்மடங்கு உறுதியடைந்தது. தாமாக வருபவரைக் கௌரவ சேனநாயகா வேண்டாமென்பாரா? இக்கட்சியினர் தமது கொள்கைக்குச் சிறிது ஊனம் ஏற்படாதாக ஏன் மறுக்கவேண்டுமோ? வகுப்புவாதத்தை இதுவரையும் எவ்வளவு உக்கிரமாக எதிர்த்தனரோ அப்படியே மேலும் எதிர்த்து வருவார். ஆரம்பத்திலேயே—அதாவது இற்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னர்—தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் ஒத்துழைப்பிருப்பின் எவ்வளவு கௌரவமும் மதிப்பும் ஏற்படும். எப்படியாயினும் ஆருக. சேனநாயகாவுக்குப் புதிதாக ஒன்றுங் கூறவேண்டியதில்லை. இவர் எல்லாச்சமயத்தவரையும் சாதியினரையும் பாரபட்சமின்றி நடத்தும் கடமை பூண்டவர். தமிழ்க்காங்கிரஸ் மந்திரிசபையில் இடம் பெற்றதும் தமிழர் சிங்களர்க்கிடையில் அளவு கடந்த நட்பும் ஐக்கியமும் ஏற்படுமென்னலாம். வகுப்புவாதமாகும் குறுகிய நோக்காற் பாராது, தேசியமாகும் விரிந்த நோக்குடன் நோக்கின்: வித்தியாசங்கள் குரோதங்கள் ஏற்படக் காரணமில்லை.

### எதிர்த்துநிற்போர்

டொக்டர் நாகநாதன், திரு. செல்வநாயகம் முதலியவர்கட்குச் சொல்லவேண்டியது ஒன்றுண்டு. தமிழர்களைச் சிங்களரிலிருந்து பிரித்து வைக்கும் நோக்கத்தை விடுவீர்களாக. வகுப்புவாதம் என்றும் கேடித்துத் தீமையையே வருவிப்பது. இந்தியாவில் நடந்த சம்பவங்கள் இதற்குச் சான்றுபுரியும். இலங்கையிற் சமட்டி அரசியல் வேண்டுமென்று திரு. செல்வநாயகம் கூறுகின்றார். இச் சமட்டி யரசியல் (Federal Government) இலங்கையின் நன்மைக்கா? அல்லது தமிழரின் விசேஷ நன்மைக்கா? ஒருசிறியவகுப்பினர்க்காக மிகச் சிறிய நாட்டினைச் சிறுச்சிறு பிரிவுகளாகப் பிரிப்பின் ஏற்படும் செலவும் கஷ்டங்களும் இம்மாத்திரமா? ஒரு பெரிய நாட்டினைப் பிரித்துவிடும்படி கேட்பின் அதுவரவேற்கக்கூடியது. வருமானமில்லாது வட, கீழ் மாகாணங்களைப் பிரித்து வேறாக விடும்படி கேட்பதைப் புத்தியுள்ளவர் அங்கீகரிக்கமாட்டார். திரு. பொன்னம்பலம் அவர்கள் தமிழ்க் காங்கிரஸின் அடிப்படையான கொள்கைகளை உதறிவிட்டுச் சென்றதுபோல் இவர்கள் செய்யத் துணியார்கள்தான். ஆரம்பத்தில் திரு. பொன்னம்பலத்தை நம்பி மோசமாயினர்தான். ஆனல் இப்போது வேறு ஒன்றுஞ் செய்ய இடமில்லை. இன்னுங் கூடிச்சென்றாற்றான் நற்கதியடையலாம்.

---

# தமிழ்க் காங்கிரஸின் ஆற்றாமை

## வகுப்புவாதத் தீ மூட்டிய வீரர்

### ஆசிரியருக்குக் கடிதம்

உங்கள் சிறந்த பத்திரிகையிலே தமிழ்க்காங்கிரசின் கொள்கைகளையும் போக்குக்களையுங் குறித்தும், காங்கிரசுக்கு அதிகாரபீடமாயமர்ந்து கோலோச்சும் திருவாளர் காங்கேயர் பொன்னம்பலம் அவர்களின் அபக்குவ அரசியல் ஞானத்தைக் குறித்தும், எங்களில் ஆயிரவரிடம் எழுந்த ஐயங்களை வெளியிட விரும்புகின்றேன். இந்த ஐயவினுக்களுக்குத் தக்க விடையிறுத்துத் தமிழ்ப் பொதுசனங்களுக்கு ஆறுதல் அளிப்பார்களென்று நம்புகின்றேன். யாழ்ப்பாணப் பொதுசனம் அவ்வளவு அறிவு குறைந்தவர்கள் அல்லர். ஆதலினல், திருப் பொன்னம்பலம் அவர்கள், ஒளிப்பு மறைப்பின்றியும் அழப்பல் குழப்பலின்றியும் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடைதருவார் என்று காத்திருக்கின்றோம். ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேருவதைக் குறித்தாவது, சோமைபைக் குறித்தாவது, இங்கே ஆராய்ச்சியில்லை. பொதுத் தேர்தற் காலங்களில் அவர் செய்த பிரசாரமும், இப்போது அவர் நடையும் தம்முள் முழுமுரணுக விருப்பதே ஐயத்திற்கு இடந்தருகின்றது. இப்பொழுது அவர் எடுக்கும் எடுப்பும், தொடுக்குந் தொடுப்பும், பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றன:

(i) இலங்கையரசியலிற் செய்கை முறையில் அவருக்குள்ள ஞானம் பக்குவமற்றது;

(ii) இலங்கையின் அரசியலை “வருமுன்னர்” அறியும் சூக்கும தீவிர விவேகம் இல்லாமை.

(iii) தலைமைப் பீடமும் ... வாக்கும் பதவியும் செல்... வருவாயும் பிற பொருள்... ...வும் தான் ... முதலி திரு. மகாதே... ...யோர் தடையாவ...ளென்று கருதி, வகுப்புவாத நெருப்பை மூட்டிப், பொது சனங்களின் அறிவை மழுக்கி, ஐக்கிய தேசியக் கட்சிக்காரரைத் தோல்வியுறச் செய்தமை.

(iv) ஆற்றாமை நோக்கிச் சரண் புகுந்தமை

(v) சேற்றிலே நட்ட கம்பம் போல, அரசியலில் நிலைப்பும் உறுதியுமின்றி விதண்டா வாதத்திற் பரிபூரணப்பட்டுச் சந்தர்ப்பவாதியானமை. இவையன்ன பிறவுமாம்.

### வினுக்கள் வருமாறு:—

பகுதி 1

1. (அ) “பொதுவாக இலங்கைக்கும் சிறப்பாகத் தமிழ்ச் சாதிக்கும் (U. N. P.) ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் ஆட்சி முறையும் ஒரு சிறிதும் உதவா” என்று நீர் இராப் பகலாகப் பிரசாரம் செய்யவில்லையா?

இப்பொழுது நீர் அதிற் சேர விரும்புவது அழகாகுமா? யோக்கியமாகுமா?

(ஆ) “இலங்கையிலுள்ள முற்போக்கான எந்தக் கட்சியுடனும் ஒத்துழைப்பேன்; ஆனல் ஐக்கிய தேசியக்கட்சி மிகமிகப் பிற்போக்கான”தென்றீர் அல்லவா? இப்பொழுது அது முற்போக்காக மாறிவிட்டதா? முன்னில்லாத—இப்போது தோன்றிய—நீர் அநுபவத்திற் கண்ட—மாற்றங்கள் யாவை? இந்த மாற்றங்களை எப்போதாவது தமிழ் மக்களுக்கு உணர்த்தினீரா?

(இ) நீர் இப்போது அதிற் சேர விரும்புங் காரணம் யாது? முந்திச் சேருதற்குத் தடைகள் எவை? உமது விருப்பத்தைக் காங்கிரசுப் பிரதிநிதிகள் எல்லாரும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார்களா?

(ஈ) “அரசாங்கத்தில் ... ...தால் தமிச் சாதிக்கு நன்மையுண்டாகாது”, என்று இப்போது நீர் கண்ட சித்தாந்தத்தையே, பழுத்த அரசியல் வாதிகளான சேர் துரைச்சாமி, மகாதேவா, நடேசன், முதலியோர் முன்பு சொன்னர்கள். நீங்கள் அவர் வாசகம் ஒவ்வொன்றையும் விளங்க மும்மூன்று வருடம் செல்லுமா?

(உ) ஐக்கிய தேசியக் கட்சியைச் (யூ. என். பி.) சாம்பார்க்கட்சி யென்றும் அதில் யாழ்ப்பாணத்து வாழைக்காய் இரண்டு சேர்ந்ததென்றும் திமில குமிலஞ் செய்தீர் அல்லவா?

இப்போது நீரும் உம்து அடியார் கூட்டமும் அந்தச் சாம்பார்க் கட்சியிற் சேர்ந்தால்—அவர்கள் சேர்த்தால்—அந்தச் சாம்பாரில் நீர் என்ன பண்டமாகுவீர்? சக்கரைப் பூசணிக்காய் யார்? வெண்டைக் காய் யார்? வெங்காயங்கள் யார்?………… …

2. (அ) “தமிழ்ச்சாதி, தமிழ் மொழி, தமிழ்க்கலை, தமிழர் நாகரிகம், தமிழ் வீரம், தமிழ் மானம், தமிழ் இரத்தம், தமிழ் நரம்பு, தமிழ்…, இவைகளைக் காப்பாற்ற வேண்டும்” என்றெல்லாம் பேசினீரே! உண்மையானுல்,

(i) நாடாட்சி மன்றத்திற் சிங்களவர் தமது மொழியிற் பேசியபோது நீங்கள் ஏன் தமிழிற் பேசவில்லை. உரிமைக்காக இரண்டொருவார்த்தை தானும் பேசிப் பின்பு அதனையே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விளாசியிருக்கலாமே.

(ii) தமிழ்க் கொடியின் முடிபென்ன? சிங்கம் தமிழ்ச் சிங்கமாய் மாறிவிட்டதா? உம்மையுங் கொண்ட ஒரு சபையிருந்ததே. அதில் நீர் செய்த திருத்தொண்டுகள் யாவை?

(ஆ) “திருவாளர்கள், துரைச்சாமி, மகாதேவா, நடேசன் முதலியோர் பிரதமர் முதலியோருக்குக் கொடி குடை ஆலவட்டம் பிடிக்கின்றார்கள்; பிற்கதவினுல் நுழைந்து தமிழ்ச்சாதியின் மானத்தை அழித்துவிட்டார்கள்; ஐம்பதுக் கைம்பதுக்கு வாய்க்கரிசி போட்டுவிட்டார்கள்; நாங்கள் இனித் தலைநிமிர்ந்து நிற்போம்; ‘தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா’ என்பதே எனது பீஜ மந்திரம்” என்றீர். அப்படியானுல்,

(i) பிரதமர் அன்பாயழைக்கும்போது, தமிழன் மானத்தோடும் யோக்கியதையோடும் அரசியலிற் சேர்வது நன்று? ஏச்சும் பேச்சும் நடாத்திப் பழியும் பகையும் வருவித்து, வீரமும் முற்ற வெளியிலே போட்டு வெறுங்கையோடு வாய் புதைத்துச் சேருவது நன்று?

(ii) நீர் இப்போது சேருவதற்கும் நிபந்தனையற்ற சரணுகதிக்கும் பேதம் என்ன?

(iii) நீர் பட்டம் பதவிகளில் மோகங் கொண்டிருப்பதாகப் பலர் பேசிக்கொள்ளுகின்றார்கள், அதில் ஏதும் உண்மையுண்டா?

(iv) பிரதமரைப்பற்றியாவது ஐக்கிய தேசியக் கட்சியையாவது 21-8-48-இல் நடந்த கூட்டத்திற் குறைத்துப் பேசவேண்டாம் என்றும், என்னையும் குறைத்துப் பேசவேண்டாம் என்றும் காங்கிரசின் மற்றைய தலைவர்களைக் குறையிரந்து வேண்டிக்கொண்டீரென்று நேர்மையுள்ள சிலர் பேசுகின்றனர். இதில் ஏதும் உண்மையுண்டா?

(v) ஐம்பதுக்கைம்பதில் நின்று அடிமையில் அடிமையானதைப் பொதுமக்கள் ஏற்றுக் கொண்டார்களா? இல்லையா?

(இ) காங்கிரசின் எழுத்திலிருக்கும் இலட்சியங்களுக்கும், அதன் பிரதிநிதிகளுக்கும் உமக்கும் அபிப்பிராய பேத முண்டென்கிறார்கள். உண்மைதானு? திருவாளர்கள் செல்வநாயகமும், நாகநாதரும், வன்னியசிங்கமும் காங்கிரசின் இலட்சியத்தோடு வழுவாது நிற்க, நீர்மாத்திரம் வழுவிச் செல்லுதல் யோக்கியமா?

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி

சுன்னுகம், சர்வதாரிஆவணி௧௪

— காந்தி ஆண்டு 79 —

## நிமிர்ந்து நின்ற தமிழர்கள்

ஏழுந்து நில்லடா தமிழா!

நிமிர்ந்து நில்லடா தமிழா!! என்று தமிழ்க் காங்கிரஸ் கோஷ்டியார் உறைப்பாக இடித்துரைத்த கர்ச்சனைகள் இன்னும் நமது செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. "உனது உரிமைகளைப் பறிக்க வரும் சிங்களவர்களை எழுந்து நின்று — நிமிர்ந்து நின்று — எதிர்த்துப் போராடடா தமிழா!" என்றல்லவா தமிழ்க்காங்கிரஸ் தலைவர் தமிழர் உள்ளங்களில் நன்கு வகுப்புவாதத்தை புகுத்திப் பதித்தனர். இவ்வாறு விடாப்பிடியாக நின்று கேட்ட ஆயிரத்தெட்டு உரிமைகளில், எத்தனை உரிமைகள் கிடைத்தன. எவ்வளவு ஆரவாரம்? எவ்வளவு கலக்கம்? எவ்வளவு துவேஷங்கள்? எவ்வளவு கொலைகள்? சென்ற வருடம் தேர்தற்காலத்தில் ஏற்பட்ட ஊழல்கட்கு எல்லையுண்டா? இந்தப் போலி யாட்டங்கள், குதிப்புகள், கும்மாளங்களை இன்று காணேமே?

சிங்களவருடன் ஒத்துழைத்துத்தான் தமிழர்கள் நட்புரிமையுடன் வேண்டிய சலாக்கியங்களைப் பெற வேண்டுமென வாதித்த தமிழ்ப் பெரியார்களை வசை கூறி யிகழ்ந்து, அவர்கள் சென்ற இடங்கள் தோறும் துரத்திச் சென்று, ஆலகால விஷம்போல் நஞ்சைக் கக்கி, என்றுமில்லாத முறையில் அடாத செய்கைகளைச் செய்த தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் அவர் சகாக்களும் இப்பொழுது என்ன செய்கின்றனர்? பதுங்கி ஒதுங்கி நின்று சிங்களத் தலைவரை நோக்கி, "உங்கள் எண்ணந்தான்" என்று குட்டிக்கரணம் போடுகின்றனரே! இதனைத் தேசிய நோக்குடைய தமிழ்ப் பெரியார் கண்டு புன்னகைகொள்கின்றனர். "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்பது பொய்யாகுமா? இவ்வளவு ஆட்டமும் ஓட்டமும் வீண்செலவும் நட்டமுமின்றி, ஆரம்பத்தில் நடந்து கொள்ள அறியாதவரா தலைவர்? எதைச் செய்யினும் யாழ்ப்பாணத் தமிழர் தம்மைக் கைவிடாரென்ற எண்ணம் தமிழ்க்காங்கிரஸ் தலைவர்க்கு உண்டு.

இவ்வளவாக ஏமாந்தும், நிமிர்ந்தும் நின்ற தமிழனுக்கு இன்னும் நற்புத்தி உதயமாக வில்லையாயின் அதற்கு நாம் என்ன செய்வது. சென்ற பல்லாண்டுகளாகத் தம்மை ஏமாற்றி வகுப்புவாதத்தில் ஊறச் செய்து இத்தலைவர்கள் ஏன் வைத்திருந்தாரென யாராவது ஊன்றி ஆராய்ந்து நோக்கினரா? இவர் போடும் குட்டிக்கரணங்கட்கெல்லாம் 'சபாஷ்' சொல்லி நிற்பதாயின், தமிழர்களின் நிலை காலகதியில் யாதாய்முடியுமோ? இப்பொழுது இந்தப்பாய்ச்சல்பாய்ந்த தமிழ்க்காங்கிரஸ்தலைவர், அடுத்த பாய்ச்சல் எப்பொழுது செய்வரோ யாரறிவார்? இப்போது சிங்களவருடன் ஒத்துழைக்க இக் கட்சியினர் ஒருப்பட்டதை நாம் ஆட்சேபிக்கவில்லை. தாம் நினைத்தபடி ஏழைப் பொதுமக்களை ஆட்டியலைத்து மடைப்பட்டங் கட்டுவதையே நாம் கண்டிக்கின்றோம். இலங்கையில் மாத்திரமன்று, மற்றைய தேசங்களிலும் இந்த வகுப்புவாதத் தலைவரின் ஏமாற்ற முறைகளைக் கண்டு யாவரும் அருவருப் படைகின்றனர். இனியாவது தமிழர்கள் புத்திவரப் பெறுவாரா என்று நாம் கேட்கின்றோம்?

தலை தடுமாறுந் தமது தலைவரின் ஆட்டங்கட்கு உண்மைத் தமிழர் எல்லை காண வேண்டும். உண்மையை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளை மேற்கொண்டிருப்பின், இத்தனை அவமானத்தைத் தமிழ்க் காங்கிரஸும் தமிழ் மக்களும் அடையவேண்டியதில்லை. "நான் தலைவனு? நீ தலைவனு?" என்பதை நிச்சயிக்கத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் இவ்வளவு அலங்கோலங்களை நிகழச் செய்தனர். பொதுசனங்களைப் பகிரங்கமாக ஏமாற்றித் தலைமையைப் பெற்றுர். ஆனுல் எல்லாப்பொட்டுக்கேடும் இப்போது வெளியாயிற்று. விசுவாசத்துடன் காங்கிரஸில் நின்று நம்பியுழைத்த திரு. செல்வநாயகம், டொக்டர் நாகநாதன் என்போரின் பிரதாபத்தை நாம் செவிசாய்த்து உற்றுக் கேட்டால், எல்லா உண்மைகளும் விளங்கும். கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளிற் தெரியு மென்பது பழங் கதை.


இனியாவது தமிழ் மக்கள் தமது நிலையை உறுதிப்படுத்த வழி காண வேண்டாமா என்று கேட்கின்றோம். வகுப்புவாதத்தைச் சிறிதும் மேற்கொள்ளாத கட்சிகளில் தமிழர் சேர்ந்துகொண்டாற்றான் இனி உய்வுண்டு. இலங்கையில் மாத்திரமன்று எந்தநாட்டிலும் வகுப்புவாதிகட்குச்சிறிதும் இடங்கிடையாது. சிங்களவரிலும் பார்க்கச் சிறந்த அரசியல் ஆற்றலும் விரிந்த நோக்கு முடையராய் எத்துறையிலும் முன்னுக்கு நின்று உழைத்து வந்த தமிழர்களை வகுப்புவாதிகளாக்கிக் கீழே தள்ளிவிட்டவரின் வீர தீரச் செயலை என்னென்று வர்ணிப்பது? தமிழர் யாவரும் ஒற்றுமையுடையராய் இந்த வகுப்புவாதப் பசாசினை ஓட்டி விடுவாராக! அப்போது வகுப்புவாதத்தை நம்பித் தலைமை தாங்குவரும் போலிகளும் ஓட்டம்பிடிப்பர். இப்போது பெரிய நட்டத்துடனும் கஷ்டத்துடனும் அவமானத்துடனும் கற்ற பெரிய பாடத்தைத் தமிழர் ஒருபோதும் மறவாதிருத்தல் வேண்டும். அப்படிச் செய்யின், இலங்கை வாழ் தமிழர்க்கு நற்காலம் உதிக்குமென்றே கூறலாம்.

### பிரஜாவுரிமைச் சட்டம்

இலங்கை மக்களின் உரிமைகள்—விசேஷமாகப் பாதுகாக்கப்படவேண்டுமென்பது எவரும் அங்கீகரித்த விஷயம். இதற்காக இலங்கையிற் தற்போது வாழும் இந்தியர் முதலிய புறநாட்டினர்க்குச் சடுதியிற் பெருநட்டத்தை வருவித்து அவர்களை ஓட்ட முயல்வதாயின், அது பெரிய அடாத செய்கையென்றே கூறலாம். இலங்கை, பிரிட்டிஷார் பொறுப்பில் இருந்த காலத்து, பேதமின்றி எந்நாட்டினரும் இலங்கையில் வாழ்ந்து தமது விருப்பப்படி எதையுஞ் செய்து வந்தனர். இதன்பேருகப் பாரிய நட்டங்கள் வந்தெய்தியது உண்மையே. இலங்கையின் பொருளாதார நிலை மிக்க கேவல நிலையை அடைந்தது. இலங்கையில் நடத்தப்படும் கமத்தொழில், கைத்தொழில்கள் யாவும் அந்நியர் ஆதிக்கத்திலேயே நடைபெற்று வந்தன. இவைகள் காரணமாக இலங்கை யடைந்த செல்வமும் பிறர் கையில் அகப்பட்டு வேற்று நாட்டுக்குச் செல்வதாயிற்று. பிரிட்டிஷார் இருக்கும்வரையும் இதைத் தடுப்பது இயலாதாயிற்று. இப்போது இலங்கை மக்கள் சுதந்திரத்தைப் பெற்றுவிட்டமையின், இந்த ஊழல்களை நீக்கவே சட்டங்கள் இயற்றுவாராயினர். அவ்வித சட்டங்களில் ஒன்று பிரஜாவுரிமைச் சட்டமாகும். இதன்படி இலங்கையில் வாழும் எத்தனையோ இந்தியர்கள் பிரஜாவுரிமையை இழக்கப்போகின்றனர். மேலும் இவ்வுரிமையைப் பெற எத்தனையோரும் எவ்வளவோ சான்றுகளுடன் முயன்றுற்றுன் பெறலாம். ஐந்து வருடத்துக்குத் தொடர்ந்து வாழ்ந்துவரும் இந்தியரை இலங்கை வாசிகளாகக் கருதும்படி இந்திய காங்கிரஸ் பரிந்து கேட்டதற்கும் மந்திரி சபையினர் இடங் கொடுத்தாரில்லை. எனவே இச்சட்டம் இந்தியர்க்கு நேர்மாறுகச் செல்கின்றதென்பதில் ஐயமின்று. இந்திய அரசினரின் ஒற்றுமையையும் நட்பினையும் அவசியமின்றி இலங்கையரசினர் உதறித் தள்ளுவது உசிதமாகாது. இலங்கையில் வாழும் சிங்களவர் இந்தியர்மாட்டுத் துவேஷம் பாராட்டி நிற்பதை நாம் எப்படிப் பாராட்டுவது? இலங்கை இந்தியாவிலேதங்கியுள்ளதா? அல்லது இந்தியா இலங்கையிலே தங்கியுள்ளதா? என்பதை எவரும் நன்கறிவர். அயலிலுள்ளதும் பன்னெடுங்காலமாகப் பல வழியிலும் தொடர்புடையதுமாகிய நாட்டினை உதைத்துத் தள்ளிவிட்டு, எல்லாவற்றிற்கும் பிரிட்டிஷாரையும் மற்றைய மேலைத்தேச நாடுகளையும் நம்பினுல், மீட்சியடையலாமோ? சிங்களத் தலைவர்கள்மாட்டு இந்த விரோதமான மனப்பான்மை ஏற்பட்டது நன்மைக்கென நாம் நம்பவியலாது. இந்த அடாத செய்கையிற் றலையிடும் இலங்கையரசினர் நிச்சயமாகப் பின்னர் மனவருத்தமடைய நேரிடும் என்பது திண்ணம்.

### பஸ் பிரயாணம்

சென்ற சில மாதங்களாகப் பஸ் வண்டிகளிற் பிரயாணஞ் செய்வோர் அடைந்துவருஞ் சிரமங்கட்கு அளவில்லை. முப்பது பேர் செல்வதற்கென அமைக்கப்பட்ட ஒரு பஸ் வண்டியில், 100 பேர் ஏறிச் செல்வதாயின் அதன் கதி யாதாகுமென நாம் விளக்கவேண்டியதில்லை. பஸ் முதலாளிகள் இவ்விஷயத்தைச் சிறிதும் கவனியாதிருப்பது பெரிய தவறென்றே கூறவேண்டும். மரியாதையுடன் பஸ் வண்டிகளிற் பிரயாணஞ் செய்வதென்பது இயலாதாகின்றது. தாம் அடையும் இலாபத்தைப் பஸ் முதலாளிகள் கருதுகின்றுரேயன்றிப் பொதுமக்கள் அடையும் கஷ்டங்களையும் வசதிக் குறைவுகளையும் நோக்குகின்றிலர். சட்டப்படி குறிக்கப்பட்ட தொகைக்குமேற் பிரயாணிகள் ஏறிச் செல்லும் முறை யுத்த காலத்தின் பின்னர்தான் சாதாரண விஷயமாக வந்துவிட்டது. அரசினர் இந்தக் கொடுமையை நீக்க ஏன் முயலக்கூடாது? பொலீஸார் வேண்டிய நடபடிக்கைகளைக் கையாளின் இந்தக் குறை ஏற்படக் காரணமில்லையே. அதிக இலாபம் அளவு கடந்து பெறும் பஸ் முதலாளிகள் பணவாஞ்சையால் எவ்வளவு தீமைகளைப் பிரயாணிகள் அடையச் செய்கின்றனர்! பிரயாணிகள் அதிகமாகவுள்ள வீதிகளிற் பஸ் ஓட்டத்தைப் பன் மடங்கு அதிகரித்துக்கொள்ளலாம். பிரயாணிகளைக்கொண்டு அதிக இலாபம் பெறும் இம் முதலாளிகள் ஏழைகளாகும் பிரயாணிகட்கு வேண்டிய வசதிகளை அளியாதிருப்பது பெருங் குற்றமாகும். அரசினர் இவ்விஷயத்திற் பாராமுகஞ் செய்யாது வேண்டிய முறைகளைக் கையாள்வது அவசியமாகும்.




இலங்கைப் பல்கலைக் கழகத்து உப அத்தியட்சகர் சமீபத்திற் சீமைக்குச் சென்றிருந்தார். அங்கு அவரை ஒரு பல்கலைக் கழகம் கௌரவப்பட்ட மளித்துக் கண்ணியப் படுத்திற்று. அப்பட்டத்தைப் பிற்போக்கு அரசியல் வாதியான சேர்ச்சில் வழங்கியிருந்தார். சேர். ஜென்னிங்ஸ் இருக்கின்றுரே, அவர் ஏகாதிபத்தியத்துக்கு மிண்டு கொடுக்கும் ஒரு டாக்குத்தர். இப்பெரியாருக்கு ஏகாதிபத்தியப் பெருச்சாளியாய சேர்ச்சில் பட்டம் வழங்கியது மிகவும் பொருத்தமானதாகும். இனி சேர் ஜென்னிங்ஸ் அவர்கள் இலங்கையிலும், மலாயாவிலும் பல்கலைக் கழகங்கள் மூலம் தாய்ப்பாஷைக்குக் குழி தோண்டலாம்.

#### காடைத் தனம்

சேர் ஜென்னிங்ஸ் பிறந்த நாட்டை நோக்கிச் சென்ற காலத்தில் அவருக்குப் பதிலாகப் பேராசிரியர் ஏ. டபிள்யூ மயில்வாகனம் கடமையாற்றினர். அந்தக் காலத்திற் பல்கலைக்கழகத்து மாணவர்கள் சிலர் காடைத்தனமாக நடந்துகொண்டது மன்றி அங்கு புதன் முறையாகச் சேர்ந்து கொண்ட மாணவிகளைத் துன்புறுத்தினரெனவும் பத்திரிகைகளிற் படித்தோம். முஸ்பாத்திக்காகச் சில வேடிக்கைகள் பல்கலைக் கழகங்களில் நடைபெறுவது வழக்கம் ஆனுல் எதற்கும் ஒரு எல்லை வேண்டாமா? பண்பாடு, சீர்திருத்தம் என்ற பெயராற் காடைத்தனங்கள் நடைபெறுவதை யார்தான் சகிக்க முடியும். ஆகவே, சேர் ஜென்னிங்ஸ் இலங்கை திரும்பியதும் குறித்த மாணவர்களின் சேட்டைகள் அவருக்கு எடுத்தோதப்பட்டன. கூட்டங்கூடி ஆலோசித்த பின்னர் ஏழுமாணவர்கள் சரியாகக் கண்டிக்கப்பட்டனர். இது வனையோருக்கும் ஓர் எச்சரிக்கையாக இருக்குமல்லவா?

#### அரசியற் சாஸ்திரம்

அரசியல் என்றால் அது கிள்ளுக்கிரையாகி விட்டது. இதுகாரணமாகத் தெரிவிற் போவோர் வருவோர் பலர் அரசியலைப்பற்றிப் புகைபபறக்கப் பேசுகின்றனர். அரசியல் சாமனியமான கலையல்லவென்பதைத் தமிழ்க் காங்கிரஸ் அடைந்த பெரிய வெற்றியிலிருந்தும், அது கௌரவமற்ற முறையிற் சரணடைந்த தோல்வியிலிருந்தும் நன்கு அறிந்துகொள்ளலாம். 'அரசியற் சாஸ்திரத்துக்கு இரண்டு முகங்களுண்டு. ஒன்று உண்மை. மற்றென்று கற்பனை' என ஓர் அறிஞர் கூறுகிறுர்.

அவர் மேலுங் கூறுவதாவது:- "அதாவது நிகழ்காலத்தில் நம் கண்முன்னே காணப்படுகிற அரசியல் அமைப்புகள், அவற்றின் அசைவுகள், அந்த அசைவுகளினுல் உண்டாகிற விளைவுகள், இவைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு எதிர்காலத்தில் அரசியல் அமைப்பு எப்படியிருக்கவேண்டும், எப்படியிருந்தால் அதிகமான நன்மைகள் உண்டாகுமென்பனவற்றைக்கற்பனைசெய்துகாட்டவேண்டியது அரசியற் சாஸ்திரத்தின் கடமையாகக் கருதப்படுகிறது."

தமிழ்க்காங்கிரஸுக்கு அரசியல் தூரதிருஷ்டியு மிருக்கவில்லை. கற்பனையூற்றும் சுரக்கவில்லை. ஆகவேதான் அது நிலைநிற்க முடியவில்லை.

#### ஒரு நல்ல சூடு!

இதிலிருந்து பொது மக்கள் ஒரு நல்ல பாடம் படித்திருக்கின்றனர். சிறப்பாக ஒருசில அரசாங்க ஊழியர்களும், சில பிறக்கிருசிமாரும் சரியான சூடு பெற்றிருக்கின்றனர். 'இன்றுவிட்டேன் கொண்டலடி' என்ற வாக்கியம் இவர்கள் விஷயத்திலும் நன்குபொருந்தும். இவர்களுக்கு இன்னுமோர் உண்மையை கூறவேண்டும். அதுவருமாறு: "எந்த நாட்டில் மனிதர்களை விடத் தலைவர்கள் அதிகமாகவிருக்கிறுர்களோ, எந்த நாட்டிலே தலைவர்களைப் பின்பற்றுவோர்களைக் காட்டிலும் அவர்களைப் போற்றுவோர் பெரும்பான்மையோராயிருக்கிறுர்களோ அந்த நாட்டுக்கும் அடிமைத்தனத்துக்கும் அதிக தூரமில்லை."

### குடியேற்றக் கட்டுப்பாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குமாம் ஸ்ரீ. கே. கனகரத்தினம் அவர்களுக்கு யூ. என். பி. அதிகார பீடத்தில் மதிப்பான பதவி கிடைக்குமென நம்பப்படுகின்றது.

ஆனுல் இன்றுவரை தமிழ்க் காங்கிரஸ் எதிர்க்கட்சியிலுள்ள ஆசனங்களைவிட்டு அரசாங்கக் கட்சியுடன் போய் இருந்துகொள்ளவில்லை. அப்படிச் சேரமுன்னர் பிரதமர் தமிழ்க் காங்கிரஸுக்குப் பதவிகளைக் கொடுக்க மாட்டார். அத்துடன் இவர்கள் உத்தியோகப் பொறுப்பற்ற மந்திரி ஸ்ரீ குணசிங்காவுக்கும் மனுச் செய்துகொள்ள வேண்டும். தமிழ்க்காங்கிரஸ்காரர் கரிநாள் போன்ற கெட்ட தினங்களை அகற்றிச் சுப தினத்தில் யூ. என். பி. யுடன் சேர்ந்து கொள்வதற்குச் சோதிடர்களைத் தேடியலைகின்றனர் என்ற பேச்சும் எட்டுகின்றது. இப்படிச் சுபவேளையைப் பார்த்துக்கொண் டிருக்கையில் வேறு சிலருக்குப் பதவிகள் கிடைத்தும் விடலாம். பத்தகமப் பிரதிநிதி ஸ்ரீ அமரசூரியாவுக்கு உபதலைவர் பதவி கிடைக்குமென நம்பலாம். மாத்தளைப் பிரதிநிதி ஸ்ரீ நாணயக்காரா அவர்களும் இப்பொழுது யூ. என். பி. யுடன் காதல்கொண்டு நிற்கின்றுர். ஆகவே, தமிழ்க் காங்கிரஸ் திரிசங்கு சுவர்க்கம் என்று சொல்லுவார்களே அந்தப் பக்குவ நிலையை அடையாமல் நேரத்துடன் காரியத்தைப் பார்த்துக்கொள்வதேபுத்தியாகும்.

## பிரதமருக்கு அழைப்பு

### யாழ்ப்பாணத் தீர்மானம்

யாழ்ப்பாணம் ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகசபை சென்ற 25ந் திகதி வைசவ வித்தியா விருத்திச் சங்கக் காரியாலயத்திற் கூடியது. நியாயவாதி எஸ். இராசரத்தினம் தலைமை வகித்தார். வடமாகாணத்திற் பல பாகங்களிலும் தேர்தற் சங்கங்கள் ஏற்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டதுடன், ஐக்கிய தேசியக் கட்சியைக் கொண்டுநடாத்தும் தலைவரான பிரதம மந்திரி சேனநாயகாவின் தலைமையும் போற்றப்பட்டது.

குடியிருப்புத் திட்டத்தின்படி கரையூரில் அரசாங்கம் அமைத்துள்ள வீடுகளைப் பிரதமர் சேனநாயகா அவர்கள் திறந்துவைக்க வேண்டுமெனவும் அதற்காக அவரை யாழ்ப்பாணத்துக்கு அழைக்கவேண்டுமெனவுந் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்தமாதம் முற்பகுதியில் கொழும்பிலே நடைபெறவிருக்கும் ஐ. தே. கட்சியின் வருடாந்த விழாவிற் பங்குபற்றுவதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து 22 பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜாஜிக்கு உபசாரம்

இந்தியாவின் பிரதம தேசாதிபதியாகும் ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியர் தென்னிந்தியாவிற் பிரயாணஞ் செய்து இப்போது சென்னையில் நிற்கின்றனர். இவர் பிரதம தேசாதிபதியான பின்னர், தமது சொந்த நகரமாகும் சென்னைக்கு இப்போதே சமுகமளித்தனர். சென்னையிலும் மற்றைய இடங்களிலும் இவர்க்கு அளிக்கப்பட்ட உபசாரம் மகத்தனது. சென்னைத் தேசாதிபதி சேர் ஆக்கிபோல்ட் நை அவர்கள் விமான நிலையத்துக்கு நேராகச் சென்று இவரை வரவேற்றனர். பிரதம தேசாதிபதியின் கூரிய விவேகம், களங்கமற்ற சன்மார்க்க வாழ்வு, கடமையைத் திருப்தியாகச் செய்து முடிக்கும் ஆற்றல் என்பனவற்றைப் பலர் புகழ்ந்து பாராட்டினர். பதிலளிக்கையிற் பிரதம தேசாதிபதி மகாத்மா காந்தியின் வழியில் நிற்பின் இந்தியாவிற்கு ஒரு குறையும் நேராதென்றார். காந்திஜியின் போதனைவழிச் செல்வோமாயின் அன்னாருக்கு இறப்பேயில்லை யெனவுங் கூறினர்.

### ஹைதராபாத்

இச் சமஸ்தான விஷயமாகப் பல விடங்களிற் பிரதம தேசாதிபதியாகும் ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியாரின் அபிப்பிராயத்தைப் பலர் நாடினர். ஒவ்வொருவரும் தமது கடமையைச் சரிவரச் செய்யின் ஒரு குறையும் ஏற்படக் காரணமில்லை. ஹைதராபாத் விஷயமாகச் செய்யவேண்டியதை இந்திய அரசினர் செய்து முடிப்பது நிச்சயம். இதைக் குறித்து மற்றையோர் மனம் பதைபதைக்க வேண்டியதில்லை யென்றார். இந்தியாவுடன் சேரவேண்டிய இச்சமஸ்தானம் ஒருகால் பாக்கிஸ்தானுடன் சேரக்கூடும் என்றும் புதினங்கள் கிடைக்கின்றன. அப்படியாயின் இச்சமஸ்தான நிலை மிக்க கேவலநிலையை அடைவதுடன் பாக்கிஸ்தானுடன் மேன்மேலும் பிணக்குகள் அதிகரிக்க வேண்டியதாகுமே. காஷ்மீர் ஹைதராபாத் ஆகிய இருநாடுகளையும் தாம் ஒருபோதும் விடவியலாதெனச் சில வகுப்புவாதிகள் அட்டகாசத்துடன் கூறுகின்றனர். இந்தியா இதற்கு அஞ்சப்போவதில்லை.

### ஐ. சங்கம் ஏற்படுமா?

ஹைதராபாத் சமஸ்தான அரசினர் தமக்கு இந்தியாவுடன் ஏற்பட்ட பிணக்கினை ஐக்கிய தேசீய சங்கத்தில் தீர்ப்புக்குவிட உத்தேசிக்கின்றனர். இதைக் குறித்துப் பலவிதமான புகார்கள் எழுந்துள்ளன. அப்படிச்செய்ய நிஸாம் மன்னர் விரும்பவில்லை யென்றுஞ் சிலர் கூறுகின்றனர். இந்திய சமட்டிக்குள் இருக்கும் ஒரு நாட்டின் விஷயத்தில் ஐக்கிய தேசீய சங்கம் தலையிடாதென்பதே பலரது அபிப்பிராயமாகும். இந்தியாவுக்குள் இருக்கும் நாடு பூரண சுதந்திரத்தைப் பெறுவதெப்படியோ. இந்திய வாசிகளின் பாதுகாப்பில்லாமல் இருப்பதெப்படியென்றுங் கேட்கின்றும். பூரண சுதந்திரத்தை நாடும் இச்சமஸ்தானம் பொதுமக்கட்குச் சுதந்திரமளிக்க மறுக்கின்றது. ஐக்கிய தேசீய சங்கத்தில் இவ்விஷயம் வாதத்துக்கு வந்தாற்றான் இச் சமஸ்தான மன்னரின் உண்மை நிலையை உலகம் அறியக்கூடியதாகும். சர்வாதிகார தோரணையில் ஆட்சிபுரியப் பார்க்கின்றார் நிஸாம் மன்னர். இதற்கு யாவர்தான் இடங்கொடுப்பார்?

## பலவந்த மதமாற்றம்

### காஷ்மீரில் அக்கிரமம்

காஷ்மீரிற் கலகக்காரர் செய்யக்கூடிய அக்கிரமங்களைக் குறையின்றிச் செய்கின்றனர். இந்தச் சமஸ்தானத்தில் லட்டக்கா என்னும் பள்ளத்தாக்கில் ஒரு புத்த ஆலயமும் மடமும் உண்டு. இந்த மடத்தைப் பாக்கிஸ்தான் போர்வீரர் கொள்ளையடித்துச் சென்றனராகப் புதினங்கள் கூறுகின்றன. இம் மடத்திலிருந்த புத்த குருவினைக் கலகக்காரர் தூக்கிச்சென்று கொன்றுவிட்டனராம். இங்கு வசித்த வேறு ஐந்நூறு பௌத்தர்களும் வாளுக்கு இரையாயினராம். அநேக பௌத்தர்களும் கிறீஸ்தவர்களும் பலவந்தமாக ஸ்லாம் மதத்திற் சேர்க்கப்பட்டனரென்றும் ஓர் செய்தி கூறுகின்றது. பல இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற புத்த பெருமானின் சிலையுங் களவாடப்பட்டது. மறுபடியும் இக் கலகக்காரர் வேறு மடங்களையும் ஆலயங்களையும் தாக்க ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிகின்றது. இதுதான் பாக்கிஸ்தான் அரசினரின் பரிபாலன முறையா!

### - இந்தியா -

### பரோடா மன்னர்

பரோடா சமஸ்தான மன்னர் விஷயமாக எழுந்த பிரச்சினைகள் இப்போது புது டில்லியில் ஆராயப்படுகின்றன. அதன்பேருகச் சில ஒழுங்குகட்கு அம்மன்னர் வந்துள்ளார். இச்சமஸ்தானப் பிரதமரான ஸ்ரீ ஜீவராஜ் மேதாவும் இவ்வாலோசனைகளிற் பங்குபற்றி வருகின்றார். இச் சமஸ்தான மன்னர் தமது அதிகாரம் முழுவதையும் மந்திரிகள் கையில் விட இணங்கியுள்ளார். அரசியலமைப்புச் சபையொன்று விரைவில் அமைக்கப்படும். இச் சபை புதிய அரசியற்றிட்டமொன்றினை அமைக்கும். இச் சமஸ்தானப் பணத்தில் மன்னர் மூன்றுகோடி ரூபாய் தமது எண்ணப்படி செலவுசெய்தனர். இப் பணவிஷயமாக சர்தார் வல்லபாய் படேல் செய்யும் தீர்ப்பினை மன்னர் அங்கீகரிப்பாராம். இச்சமஸ்தான விஷயம் சங்கடமின்றி முடிவு செய்யப்பட்டுளது. இப் பெருமை இந்திய அரசினர்க்கே புரியது.

## தலைவரின் இரண்டகச் செயல்

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

பிரமாணத்துக்கேற்ப அமைந்துள்ளன.

"நீரும் உமது சகாக்களும் தமிழ்க்காங்கிரஸின் கொள்கைகளுக்கு இரண்டகம் பண்ணியிருக்கின்றீர்கள் என்பதை நான் உறுதியாகக் கூறுகின்றேன்.

"தமிழ்க் காங்கிரஸின் நோக்கங்களையுங் கொள்கைகளையுங் கௌரவிக்கும் முறையில் நீர் ஸ்ரீ சேனநாயகாவுடன் சமாதானஞ் செய்து கொள்ளவில்லை. நீர் உபக்கு ஒரு மந்திரிப் பதவியையும், ஸ்ரீ சிவபாலனுக்கு உதவி மந்திரிப் பதவியையும் பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானித்து விட்டீர். இவ்வாறு இழிந்த முறையிற் சரண்புகுந்தமையை நீர் 'கூட்டு மந்திரிசபை'யெனக் கூறுவது பரிதாபகரமான பரிகாசமாகும்!

"இலங்கைப் பிரஜா உரிமை மசோதா நிறைவேறிய பின்னர் சூட்டோடு சூடாகத் தாங்கள் மந்திரிப்பதவியை ஏற்பது, தமிழ்க் காங்கிரஸின் மூலாதாரக் கொள்கைகளுக்கு முற்றும் பாறுனது.

"தமிழ்க் காங்கிரஸின் நிர்வாகசபை அங்கத்தவர்களுக்கும் வேறுபகுதிகளில் நிறுவப்பெற்றகிளைச்சங்கங்களின் அங்கத்தவர்களுக்கும் உமது போக்கு முற்றாகப் பிடிக்கவில்லை.

"பேற்சபையில் என்னை அங்கத்துவம் வகிக்கும்படி அவர்களில் அநேகர் என்னை வேண்டுவதுடன், தமிழ்க்காங்கிரஸின் நோக்கங்களையும் என்னுலியன்றளவு பிரசாரம் செய்யும்படியும் கேட்கின்றனர். நீரும் உமது சகாக்களும் தமிழ்க் காங்கிரஸின் கொள்கைகளை ஒதுக்கிவிட்டு இப்போது புதுப்பாதையைப்பற்றி விட்டீர்கள்.

"கூட்டமொன்று கூடி நொடிப்பொழுதில் வாக்குகளைப் பெற்றுக்கொண்டீர் அங்கே கூடியிருந்தவர்களுக்கு நிலைமையை நீர் நன்கு விளக்கி வைக்கவில்லை. இப்படி நீர் மக்களிடமிருந்து அதிகாரம் பெற்றுக் கொண்டீர். இது மகா சாமர்த்திய மாகுமேயன்றி, எவ்விதத்திலும் 'மக்கள் தந்த அதிகாரம்' என்று ஏற்றுக்கொள்ள முடியாது"

"நீர் ஒன்றுமட்டுஞ் செய்யலாம். அதாவது உமது அரசியற் குட்டிக் கரணத்துக்கு மாத்திரம் ஆதரவு பெற்று உமது பிரதிநிதிப் பதவியை உதறித் தள்ளலாம். அதற்குப் பின்னர் மீண்டும் போட்டியிடலாம். இல்லையேல் தமிழ்க் காங்கிரஸின் அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு மகா நாட்டில் அதிகாரம் பெற்றுக் கொள்ளலாம்... ..."

### 6000 — பேர்தான்

சென்ற சனிக்கிழமை (21-8-48) யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸ் கூட்டம்பற்றி டொக்டர் நாகநாதன் கொழும்பிலுள்ள பத்திரிகை நிருபர் ஒருவருக்குக்கூறியதாவது:

"யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டம் ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அத்தியந்த நண்பர்களால் ஒழுங்கு செய்யப்பட்டது. 10,000 பேர் கூடியிருந்தனர் என்பது அண்டப் புழுகாகும். ஏறக்குறைய 6,000 பேர் அன்று கூடியிருந்தனர். எனக்கும் வேறு சில அங்கத்தவர்களுக்கும் அக் கூட்டத்திற் பேசுவதற்கு உரிமைகிடைக்கவில்லை."

### "வாழிய செந்தமிழ்"

பாரதியாரால் இயற்றப்பட்ட "வாழிய செந்தமிழ்" என்ற பாட்டைத் தமிழ் நாட்டிலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் [illegible] காலத்தில் பாட வேண்டும் என்று சென்னை அரசாங்கம் உத்தரவு செய்திருக்கிறது.

## தமிழ்க் காங்கிரஸின் ஆற்றுமை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

(ஈ) ஐ. தே. கட்சியிற் சேர்ந்தபின்பு தமிழ்க் காங்கிரசு இருக்குமா? அழியுமா? வேறென்ன காங்கிரசு தோன்றும்?

(உ) அரிசனர் சைவக் கோயில்களிற் பிரவேசிக்க விடுதற்கு நீர் செய்த முயற்சிகள் எவை? விடுவது உமக்கு உடன்பாடா?

(ஊ) தமிழ்க்கொடி, ஆலயப்பிரவேசம் முதலிய கருமங்களிலே பொதுசன சம்மதம் பெற்றீரா? சம்மதம் வேண்டாமா?

(எ) ஐ. தே. கட்சிக்காரர் உங்களை வேண்டாம் என்று நீக்கினால் உங்கள் கதி யாது?

(ஏ) தமிழும் அரசாங்க மொழியாக வருதற்கு நீர் செய்த திருப்பணிகள் யாவை? அத் திருப்பணி இன்னும் முற்றுப்பெறவில்லையா?

(ஐ) இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் நீர் ஏன் கலந்து வாதிக்கவில்லை? இந்த முறைத் திட்டம் சீராக இருக்கின்றதா? இல்லையா?

இவைகள் தான் முதற்பகுதி வினாக்கள்.

1. **இவைகளுக்குப் பொருத்தமான விடைகளைத் திருவாளர் க. பொன்னம்பலம் அவர்களே தருதல் வேண்டும். ஏனையோருடையன அங்கீகரிக்கப்படமாட்டா; தலைவருடைய முடிபுகளே முடிந்ததன் முடிபுகளாதலின் என்க. விடைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் ஏற்றுக்கொள்ளப்படும்.**

2. **இதுபோலவே மற்றைய தலைவர்களான திருவாளர்கள் க. கனகரத்தினம், வே. செல்வநாயகம், கு. வன்னியசிங்கம் என்போர் போக்குகளும் முடிபுகளும் ஆராயப்படும்.**

3. **கொடிகாமத்தில் வசிக்கும் வழக்கறிஞர் கார்த்திகேசு என்பவரின் பொருந்தாக் கூற்றுக்களும் ஆராயப்படும்**

4. **இதனைப் படிப்போர் கருத வேண்டியது இது:-** இங்கே அரசியற் கட்சி பேதங்களும் முடிபுகளும் ஆராயப்படவில்லை. பொதுத் தேர்தல் நடந்த காலத்தில் எவற்றைப் பொதுமக்களுக்குச்சொல்லி வந்தார்களோ அவற்றை மறந்து அவற்றுக்கு முழுமாறுகச் செல்வது அவர்கள் பிரசாரத்திற்கு முழுவதும் தவறு. எந்த நோக்கத்திற்கு அவர்கள் சென்றார்களோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுது முரணான புதிய நோக்கங்களைக் கொள்வது தவறு. தாம் வாக்குச் செய்த நோக்கங்களை நிறைவேற்ற முடியாத விடத்தில் (i) அவர்கள் தமது பதவியினின்றும் விலகுதல் ஏற்றது; அல்லது, (ii) தம்மையனுப்பிய ஏழைப் பொதுமக்களுக்குத் தமது ஆற்றுமையை விளங்கப்படுத்திப் பொறுதிகேட்டு, மீட்டும் அப்பதவியில் நின்று தொண்டாற்ற வேண்டும். பொதுசனங்களை யனுப்புதல் பெருங்குற்றம். "கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்".

இக்கடிதம், காங்கிரசின் அபிமானிகள் ஆயிரவர் கருத்தை யுட்கொண்டெழுதப்படுவது:

நவாலியூர் 22-8-48 } சோ. இளமுருகனர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தச் சுகவாழ்வு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

முடிவாகின்றது. சத்தற்ற உணவு கிடைக்குமானுல் இன்னும் ஆறு வருடத்துக்குப் பின்னர் பூரண சுதந்திரமடைவோமென்பது பலாது அபிப்பிராயம்.

## புதிய கோணம்

இனி, நாங்கள் இதை வேருேர்கோணத்திலிருந்து ஆராய்வோம். இன்று நாங்கள் சுகவாழ்க்கைவாழ்கின்ருேமாயின் அதற்குக் காரணம் சாஸ்திர ரீதியில அமைந்த எமது ஒழுக்கமேயாகும்.

படைவீரர்கள் வயிறு நிலத்திற் பட அணிவகுத்துச்செல்வதுமுண்டு. தவளை, அட்டை போன்ற சில ஜெந்துக்களும் அப்படியே செய்கின்றன. மனிதரும் வயிறு நிலத்திற் படத் தவழ்ந்து செல்வதுண்டு என்பதை எடுத்துக்காட்டுவதே இதன் நோக்கமாகும். வயிற்றுக்கு வாயே பிரதானம் என்க. ஆகவேதான், அரசியல்வாதிகளையும், நல்லொழுக்கம் போதிப்பவர்களையும் பார்த்து 'வாயில்லாதுபோனுல் இவர்களை நாய் கொண்டுபோய்விடும்' என்று அர்த்த புஷ்டியுடன் கூறியிருந்திருக்கவேண்டும். ஆனுல் வாயை அடைத்துக்கொண்டு பற்கள் இருக்கின்றன வென்பதையும் நாம் மறந்து போகக்கூடாது.

## பழைய சித்தாந்தம்

எமது நாட்டிலுள்ளவர்களுக்குப் பல் என்ருல் அது உயிர். 'எண்பது வயதாகியும் ஒரு பல்லுக்கூட ஆடவில்லை' என்று கூறிப் பெருமையடிப்பவர்கள் பலர் இன்றுந்தான் இலங்கையில் உளர். அத்துடன் இக்காலத்திற் செயற்கைப் பற்களைக் கட்டி மதிப்பாகத் திரிபவர்களும் இருக்கின்றனர்.

இதைப் பார்த்து நீங்கள் சிரிக்க வேண்டியதில்லை சொந்தப் பற்களைப் பிடுங்கி விட்டால் அப்புறம் தந்தத்தாலான பற்களைக் கட்டிக்கொள்ளலாம். பிள்ளைகளுக்குப் பல்லுப் பிடுங்குவதற்காக இன்று டாக்குத்தர்மார் பள்ளிக்கூடங்களைத் தரிசித்து வருகின்றனர். இவர்களுக்கு அரசாங்கம் சம்பளமுங் கொடுக்கின்றது.

வாய்பற்றி எமது முன்னேர்கள் எவ்வித அபிப்பிராயமுள்ளவர்களாக விருந்தார்களோ, அதே போன்றதுதான் கண்பற்றிய அவர்களது அபிப்பிராயமும். வெறுங் கண்களால் வாழ்க்கையைப் பூரண நிலையிற் பார்க்கலாமென்பது அவர்கள் சித்தாந்தம். வான சாஸ்திரிகளுக்குத் தூரதரிசினம் இல்லையேல் அவர்கள் எவ்வளவு கஷ்டமுறுவார்கள் என்பதை அவர்கள் அறியவில்லை.

## பல்லக்கிற் பவனி

அந்தக் காலத்தில் எமது முன்னேர் பல்லக்கிற் பவனி சென்றனர். இவர்களை அடிமைகளே சுமந்தனர். இது காரணமாகச் சுமந்து செல்வோரின் முதுகெலும்புகள் கெடலாயின. இந்த அழகில் அடிமைகள் அரசபரம்பரையினர் முன் உருண்டு தவழ்ந்ததில் ஒரு நூதனமுமில்லை.

பின்னதாக வடக்கன் மாடுகள் பூட்டிய வண்டிகள் பிரபல்யமாயின. பணம் படைத்தவர்கள் குதிரை வண்டிகளை வாங்கினர். சிலர் வீட்டிலேசோடிக் குதிரை கட்டிப் பெரிய புள்ளிகளாக திகழ்ந்தனர்.

அந்தக் காலத்தில் 2000 ரூபாய்க்கு ஒருசோடி குதிரை வாங்கலாம். இன்று கால்களை நீட்டிப் படுத்துறங்கத்தக்க மோட்டோர் வண்டி இருந்தாலன்றி அனேகர் திருப்தியடைவதில்லை. தற்கால உலகம் வெகு வேகமாகப் பறந்து செல்வதால் இப்படிக் 'காரிலே' சென்ருலன்றி உடம்பு சரிவராது.

இன்று ஒரு மோட்டோர் வண்டி வாங்கும் பணத்துக்கு அக்காலத்தில் மூன்று நான்கு சோடிக் குதிரைகளை அவிழ்க்கலாம். ஆனுல் அந்நாட்களில் இன்றுபோல வாழ்க்கைச் செலவு அதிகரித்ததில்லையே?

## ஊர்காவற்றுறை தேர்தல் வழக்கு

### விசாரணை முடிவுற்றது

ஸ்ரீ. ஏ. எல். தம்பிஐயா அவர்களின் தேர்தலை ஆட்சேபித்து ஸ்ரீ ஏ. வி. குலசிங்கம் அவர்களால் தொடரப்பட்ட வழக்கு விசாரணை முடிவுற்றது. தீர்ப்பு இன்னும் தெரிவிக்கப்படவில்லை.


# இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி
# THE CEYLON STATE MORTGAGE BANK

இந்த அரசாங்க ஈட்டு வங்கியில் கடன்கள், பத்திரங்கள் மூலம் அசைவற்ற காணிகளின் பிணையிற் கீழ்க்காணும் விஷயங்களுக்குச் செலவுசெய்யும் பொருட்டுக் கொடுக்கப்படும்.

(1) கமத்தொழில் விஷயங்களுக்கும்,
(2) கட்டிடங்கள் கட்டுவதற்கும், விலைக்கு வாங்குவதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும்.
(3) மேற்காட்டிய விஷயங்களின் பொருட்டுக் கடன் வாங்கி யிருந்தால் அக்கடனைத் தீர்ப்பதற்கும்.
(4) ஏதாவது கட்டடங்கள் அல்லது காணியின் பேரிலுள்ள ஈடு மீளுவதற்கும்.

வட்டி விபரம் பின்வருமாறு:— கடன் எடுக்குந் தொகை 5,000 ருபாவுக்குக் குறைந்திருந்தால் 6 வீத வட்டியும்; 5,000 ருபாவுக்குக் கூடியும் 10,000 ருபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5½ வீத வட்டியும்; 10,000 ருபாவுக்குக் கூடியும் 50,000 ருபாவுக்குக் குறைந்துமிருந்தால் 5 வீத வட்டியும; 50,000 ருபாவுக்குக் குறையாதிருந்தால் 4½ வீத வட்டியுமாம்.

கடன்கொடுக்கும் குறைந்த தொகை 2000 ரூபாவாகும். விபரங்கட்கு 'மனேச்சர்', இலங்கை அரசாங்க ஈட்டு வங்கி, இல. 127, கெமேல் பிளேஸ்', கொழும்பு, என்ற விலாசத்திற்கு எழுதி அறியவும்.

[3472]


# சுகாதார வாரம்

## காங்கேசன்துறை—மயிலிட்டிப் பகுதி

மேற்படி வாரம் குறித்தபகுதிகளில் இம்மாதம் 15-ந் தேதி தொடக்கம் 22-ந் தேதி வரையும் நடைபெற்றது.

21-ந் தேதி காங்கேசன் துறை நடேஸ்வரக் கல்லூரியில் சுகாதாரபொருட்காட்சியுடன் டொக்டர் குருசாமி அவர்கள், இளைப்பாறிய மாகாணவைத்திய அதிகாரி ஸ்ரீ எஸ். சுப்பிரமணியம் அவர்கள், சுகஸ்தான வைத்தியர் டொக்டர் ஏ. எம். டி. றிச்சேட் அவர்கள், டொக்டர் பட்டேல் (காங்கேசன் துறை சிவில் ஆஸ்பத்திரி உதவி வைத்தியர்) அவர்கள், வட்டார வித்தியாதரிசி ஸ்ரீ எஸ். இராமலிங்கம் அவர்கள், காங்கேசன் துறை பொலிஸ் இன்ஸ்பெக்றர் திரு. எஸ். சிவசம்பு அவர்கள் ஆதியோர் சுகாதாரம், கல்வி, குற்றத்தடை, பணச் சேமிப்பு ஆதியாம் விஷயங்கள் பற்றியும் மிகச் சிறந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

22-ந் தேதி மாலை 6 மணியளவில் பலாலி, அரசினர் ஆசிரிய கலாசாலையில் காங்கேசன் துறைப் பகுதிப் பிரதிநிதி ஸ்ரீ எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களதும், அவரது பாரியாரினதும் ஆதரவில் சுகாதாரவாரங் கொண்டாடப்பட்டது. மேற்படி கலாசாலை அதிபர் திரு. கே. சண்முகரத்தினம் அவர்கள் திரு. செல்வநாயகம் அவர்களை வரவேற்றுப் பேசினர். பின்னர், ஸ்ரீ. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் "தேசத் தொண்டும் மக்களின் கடமையும்" என்னும் விஷயம் பற்றியும் டொக்டர் பி. இராசசிங்கம் அவர்கள் "கிராமச் சுகாதாரம்" என்னும் விஷயம் பற்றி மிகச் சிறந்த சொற்பொழிவாற்றினர்.

அடுத்ததாக, காங்கேசன் துறை நடேஸ்வரக் கல்லூரி, காங்கேசன் துறை சைவ வித்தியாசாலை, காங்கேசன் துறை அ. மி. ஆங்கில பாடசாலை, காங்கேசன் துறை றே. க. பாடசாலை, மயிலிட்டி கொன்வென்ற், வறுத்தலைவிளான் அ. மி. பாடசாலை, குரும்பசிட்டி மகாதேவ வித்தியாசாலை, வயாவிளான் அரசினர் மத்திய கல்லூரி, வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாசாலை ஆதியன சுகாதார நடனம், பேச்சு, சங்கீதம், நடித்தல் முதலியவற்றிற் பங்குபற்றின. ஸ்ரீமதி எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் பரிசில்கள் வழங்கினர்.

மேற்படி கொண்டாட்டம், காங்கேசன் துறைப்பகுதி சுகாதார பரிசோதகர் திரு. கா. த. முத்தையா அவர்களின் முயற்சியால் சுகாதாரவார காரியநிர்வாக சபையாரின் ஒத்துழைப்புடன் நடாத்தப்பெற்றது.

## மல்லாகக் கோயிற்பற்று

அகில இலங்கைச் சுகாதார விழா மல்லாகம் கிராமச்சங்க எல்லைக்குட்பட்ட இடங்களிற் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காங்கேசன் துறைப் பிரதிநிதி ஸ்ரீ செல்வநாயகம் உட்படப் பல பிரமுகர்களும் அரசாங்க வைத்தியர்களும், அதிகாரிகளும இவ்விழாவிற் பங்குபற்றினர். கிராமச் சங்கத் தலைவர் இ. வைத்தியலிங்கம் அவர்களின் ஊக்கமும் நாட்டு மக்களின் உதவியும், சுகாதாரப் பரிசோதகர் எஸ். தில்லைநாதனுக்குப் பேருதவிகளாயிருந்தன. சுகாதாரம், சிசுபரிபாலனம் என்பன பற்றிச்சொற்பொழிவுகள் நடைபெற்றன. கதம்பக் கச்சேரியும் ஒழுங்குசெய்யப்பட்டது.

## உடுவிற் பகுதி

உடுவிற்பகுதியிற் சுகாதாரவாரம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஒருவாரத்துக்கென ஒழுங்கு செய்யப் பெற்றிருந்த இவ்விழாவிற் [illegible] சொற்பொழிவுகளும் பொருட்காட்சி-


# யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி
## 1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்

[3471]


## நாவலர் வித்தியாசாலை பெற்ருர் தினவிழா

யாழ்ப்பாணத்திலுள்ள நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைப் பெற்ருர் தினவிழா சென்ற வெள்ளிக்கிழமை (20-8-48) நடைபெற்றது. காலையிற் பாடசாலைமாணவரின் விளையாட்டுப் போட்டியும் சிற்றுண்டி விருந்தும் நிகழ்ந்தன. மாலை 5 மணியளவில் பெற்ருர் ஆசிரியர் சங்கத தலைவர் முடிக்குரிய நியாயதுரந்தரர் திரு வி. வி. சோமசேகரம் அவர்கள் தலைமையில் வருடாந்தக் கூட்டம் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாயிற்று. வடபெரும்பாக வித்தியாதிகாரி திரு எஸ். யூ சோமசேகரம் எம். ஏ. அவர்களும், வித்துவான் திரு கா. கி. நடராஜன் பி. ஓ. எல். அவர்களும் குறித்த பாடசாலையின் பழமை பெருமைகளைப் பாராட்டியும், ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானுல் நலல நோக்கத்தோடு ஸ்தாபிக்கப்பட்ட இப் பாடசாலை காலகதியில் இது ஒரு கல்லூரியாகத் திகழவேண்டியதென்றும் பலபட விரித்துப் பேசினுர்கள். தலைமை ஆசிரியர் வித்துவான் ந. சுப்பையாபிள்ளை யவர்கள் தமது வருடாந்த அறிக்கையை வாசித்தார். பலவகையிலும் திறமைகாட்டிய மாணவருக்குப் பரிசில்களும் நராதரப் பத்திரங்களும் தலைவரால் வழங்கப்பட்டன.

இரவு 7 மணியளவில் மாணவரின் கதம்பக்கச்சேரி ஆரம்பமாயிற்று. அன்னுரின் ஆடல் பாடல்கள் வெகு விமரிசையாக நடைபெற்றன. தலைமையாசிரியர் விழாவிற் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றி கூறினர். —கடித.

## விஜயகுமாரன்

இச் சரித்திர நாடகம் இடமின்மையால் இம்முறை வெளி வரவில்லை. அடுத்த வாரம் வழக்கம் போலத் தொடர்ந்து வெளியாகும். —ப-ர்.

களும் போதிய இடம்பெற்றன. இசைக்கச்சேரியும் நடைபெற்றது. இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்துக்கு மாகாண அதிபர் தலைமை வகித்தார். டொக்டர்கள் ஜி. குமாரசாமி பி. இராஜசிங்கம் இறைவரியதிகாரி ஸ்ரீ. ரி. பாலச்சந்திரன் ஆதியோர் சொற்பொழிவாற்றினர். மற்றுமோர் கூட்டத்துக்கு வழக்கறிஞர் ஸ்ரீ. ரி. வி. இராசரத்தினம் தலைமை வகித்தார். ஸ்ரீமதி. என். பி. பிள்ளை பரிசில்கள் வழங்கினுர். தலைவரவர்கள் இவ்வாண்டு உடுவிலில் நடைபெற்ற சுகாதார விழாவைப் பெரிதும் பாராட்டினுர்.

## திகல் தரும் புதிய குண்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தையாக இந்தியாவை அமைத்துக்கொண்டோம். இருபெரும் ஆகாயப் போர்க்கப்பல்களை இந்தியா விலைக்கு வாங்கிக்கொள்ளுமென மவுண்பெட்டன் சமீபத்தில் எதிர்பார்த்திருந்தார். இந்தியாவுக்குக் கொடுக்கவேண்டிய கடனைத் தீர்த்துக்கொள்வதற்குப் பிரிட்டன் காணும் வழிகளில் இதுவுமொன்று. தாங்கள் உதவாதெனத் தள்ளிவைத்த சாமான்களை அதிக விலைக்கு இந்தியாவுக்குக் கட்டியடிக்கப் பார்க்கின்றது பிரிட்டன்.

### பலவந்தம் வேண்டாம்!

இந்தியாஇப்போது சுதந்திரம் பெற்றுவிட்டது. ஆகவேஎமது தலைவர்கள் இம்சைமூலம் சச்சரவுகளைத் தீர்க்கமுடியாதென்பதையும் பரஸ்பர அன்பும் நல்லெண்ணமுமே சமாதான வாழ்க்கைக்கு வேண்டுவன வென்பதையும் உலகுக்கு எடுத்துக்காட்டுவார்களெனவும் நாங்கள் நம்பியிருந்தோம். இந்திய அரசாங்கத்தின் விவகாரங்களில்உண்மையான அக்கறை கொண்டவர்கள் இந்தியா வகுத்துவரும இப் பலவந்தத் திட்டத்தைப் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது. அதைத் தடைசெய்யவேண்டிய காலம் நெருங்கிவிட்டது.

## திரு ஆர். ஏ. டிமெல் பதவிஇழந்தார்

இலங்கைப் பிரதிநிதிகள் சபையின் உபதலைவர் திரு ஆர். ஏ. டிமெல் அவர்களின் தேர்தல், முறைகேடானதென ஆட்சேபித்து, திரு. பி. சரவணமுத்து அவர்கள் தொடர்ந்த வழக்குநீதியரசர் டொக்டர் டயஸ் அவர்களால் விசாரணை செய்யப்பட்டது. 67 தினங்களாக மேற்படி விசாரணை நடைபெற்றுச் சென்ற திங்கட்கிழமை தீர்ப்பளிக்கப்பட்டது. அதன்படி, திரு ஆர். ஏ. டிமெல் தம் பதவியை இழந்ததுடன் செலவு பணமாகத் திரு பி. சரவணமுத்து அவர்களுக்கு ரூபாய் 30, 000 செலவு கட்டவேண்டியவரானுர். தவிர இன்னும் ஏழு வருடகாலத்துக்கு வாக்காளராகப் பதியப்படும் உரிமையையும், தேர்தலில் வாக்குப் போடும் உரிமையையும், மேற்சபை அங்கத்தவராகவோ அன்றேல் பாராளுமன்ற அங்கத்தவராகவோ தெரியப்படும் உரிமையையும் இழந்துபோயினர். நீதியரசரின் தீர்ப்புப் பத்திரம் 123 பக்கங்கள் கொண்டதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பகுதி



மருமக்களே!

வணக்கம். பாலர் பகுதிப் போட்டி (இல. 3) இன்று ஆரம்பமாகிறது. இதிற் கலந்துகொள்வதற்குத் தகுதியுடையவர்கள் இதுகாலவரையும் அங்கத்தவர்களாயிருக்கும் 191 மருமக்கள்தான்.

இப்பக்கத்திற் காணப்படும் போட்டிப் பத்திரத்தையும் நிரப்பி விடையுடன் சேர்த்து அனுப்பவேண்டும். தபால் உறையில் அனுப்புவோரின் பெயர் ஒன்றும் எழுதாது, போட்டி மூன்று, கேசரிமாமா, ஈழகேசரி நிலையம், சுன்னுகம், என்ற விலாசத்திற்கு 15-9-48 க்கு முன்னதாகக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.

மேற்பிரிவுக்கு இரு பரிசுகளும், கீழ்ப்பிரிவுக்கு இரு பரிசுகளும் வழங்கப்படும். பரிசுபெற்றவர்களின் பெயர் 19-9-48 ஈழகேசரியில் வெளியிடப்படும். வணக்கம்.

கேசரிமாமா

## வறுமை

பொ. விஷ்ணு—160

குழந்தைகள் முதல் வயோதிபர்வரை வறுமையென்றால் என்னவென்று தெரியுமானாலும் அதை அனுபவித்தவரை எவராயினும் அறியமாட்டார். நான் பூமியிலே பிறந்த நாள்முதல் எனது இவ்வளவு வாழ்நாளும் வறுமைச் சிறையிலேயே மறியலிருக்கின்றேன். என் வாழ்நாள் முழுவதுமே இப்படி வறுமைச் சிறையிலேயே வைப்பான் பிரமன்.

வறுமைச் சிறையில் இருக்கும் என்ன செய்யலாம்? எனது மனம் புஷ்பம்போல் விரிந்தலர்க்க முடியுமா? வறுமை கவ்விக்கொண்டுவிட்டதே!

இனி, நான் இச் சிறையினின்றும் எக்காலத்தும் விடுபடமாட்டேன் என்று என் குழந்தைமனம் கூறுகின்றது.

பிறந்தவுடன் என்மனதில் என்னதான் தெரியும்? ஐந்து ஆறு வயதின் பின் வறுமையைப்பற்றி அறியத்தொடங்கினேன். நான் எனது வறுமைக்கு முற்றிலும் மாறாக எண்ணினேன். என் மனதில் உள்ள விருப்பங்கள் பிரதானமாக இருக்கின்றன. அவைகள்.........

பலவிதமான படிப்புக்களையும் பலவிதமான பொருட்களையும் நான் அனுபவிக்க வேண்டும் என்ற பேரவா இருக்கது. பலவிதமான தொழில்களைப் பழகவேண்டும் என்றும் ஆசை இருந்துவருகின்றது. இருந்தும் பயனென்ன?

வறுமைச் சிறையில் இருக்கும் எனக்கு வெளிச் செல்ல உத்தரவு கிடைக்குமா? அதற்குப்பொருள், பணம் இடைக்குமா? காலகதியில் என் வாழ்நாள் சிறையிலேயே அடங்கி இறந்தே போகவேண்டும்.

வறுமைச் சிறையில் அகப்பட்டவர்கள் என்ன செய்ய முடியும்?

## தேசத் தொண்டு

க. பராசக்தி—77

உலகத்தில் உள்ள சனங்கள் எல்லோரும் ஏதாவது தொண்டு செய்யவேண்டும். சிலர் தெய்வத் தொண்டு செய்பவர்களாக இருப்பார்கள். அவர்களைப் பக்தர்கள் என்று அழைப்போம். தேசத்தில் உள்ள சனங்களுக்குத்தொண்டு செய்தால் அவர்களைத் தேசத் தொண்டர் என்று அழைப்போம். தேசத் தொண்டர்கள் தங்களுடைய செல்வம், பொருள், பண்டம் முதலியவற்றை இழந்து விடுவார்கள். சிலர் தங்களுடைய உயிர்களையேஇழப்பதுமுண்டு. மகாத்மா காந்தியும் தேசத்தொண்டு செய்து தன்னுடைய உயிரையும் இழந்துவிட்டார். தேசத் தொண்டர்கள் ஏழைகளுடைய வாழ்க்கையை மேல் நிலைக்குக் கொண்டு வருவார்கள். முடிவில் அவர்களே தேசத்தின் தலைவராய்த் தலைமை வகிப்பார்கள். சிலர் கல்வி விஷயத்தில் தொண்டு செய்வார்கள். விஞ்ஞானிகளும் புலவர்களும் கூடத் தேசத்தொண்டர்களே. விஞ்ஞானிகளும் பொதுசனங்களுக்கு நன்மையான விஷயங்களைக் கண்டுபிடிப்பதில் தம்முடைய வாழ்க்கையைக் கழிக்கின்றனர். புலவர்கள் சனங்களை நல்ல வழியில் நடாத்துவதற்குப் பல பாட்டுக்களையும் கட்டுரைகளையும் எழுதி உதவி செய்வார்கள். நாம் பிறருக்கு உதவி செய்வதை முக்கியமானது எனக் கருதி இருக்கவேண்டும்.

நானும் அவர்களைப்போல் வறுமைச் சிறையில் இருந்தும் மற்றவர்களைப்பார்க்க, வறுமையாகியிருக்கும் காவலர்கள் விடை கொடுக்கமாட்டார்களாம்.

ஆகையால் எனது வாழ்நாள் வறுமைச் சிறையில் அடைபட்டு வருவது படைத்த பிரமன் அருள் அல்லவா.

"கொடிது கொடிது வறுமை கொடிது"

போட்டி — இல. 3

### மேற்பிரிவு

(13–20 வயதிற்குட்பட்டவர்களுக்கு)

## எனது கிராமம்

நீங்கள் விரும்பியவாறு சுவையான முறையில், உங்கள் கிராமத்தைப்பற்றி ஒரு கட்டுரை எழுதி அனுப்ப வேண்டும். ஒற்றை 'ரூல்' அப்பியாசக் கொப்பிக் கடதாசியில் 4 பக்கத்துக்குக் குறையாமலும் 5 பக்கத்துக்குக் கூடாமலும், கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதி அனுப்பவும்.

### கீழ்ப்பிரிவு

(12–வயதிற்குட்பட்டவர்களுக்கு)

## எனது நண்பன்

நீங்கள் விரும்பியவாறு–உங்கள் உற்ற நண்பன் ஒருவனைப்பற்றி ஒரு கட்டுரை எழுதி அனுப்ப வேண்டும். ஒற்றை 'ரூல்' அப்பியாசக் கொப்பியில் 2 பக்கத்துக்குக் குறையாமலும், 3 பக்கத்திற்குக் கூடாமலும், கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதி அனுப்பவும்.

## பிறந்ததின வாழ்த்துக்கள்

(29-8-48—4-9-48)

87. நாகமுத்து நல்லதம்பு; 90. இராஜகாரியர் பாலசுப்பிரமணியம்; 165. வீரவாகு சண்முகம்; 83. இராசரத்தினம் பாஸ்கரமூர்த்தி; 184. கு. சாமுவேல் குலரத்தினம்.

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக.

## புத்திரப்பேறு

சி. பரஞ்சோதி–155

மானிடராய்ப் பிறந்த எவருக்கும் பல செல்வங்கள் உள. அவற்றுள் புத்திரப் பேறும் ஒன்றும்.

ஒவ்வொரு பெற்றார்களும் தங்கள் புத்திரரைப் பெருஞ் செல்வமாகக் கவனிக்கிறார்கள். அவர்கள் பெருஞ்செல்வங்கள் தாம். இப் புத்திரர்களைப் பற்றிப் பலபெரியார்களும் புலவர்களும் பாட்டுக்கள் பாடியிருக்கிறார்கள்.

புத்திரரைப் பாடசாலைக்கு அனுப்புகிறார்கள். எத்தனையோ பொருட் செல்வங்களைச் செலவழிக்கிறார்கள். ஆம், புத்திரரைப் பெரிதென்று அல்லவா செல்வங்களைச் செலவழிக்கிறார்கள்.

பிள்ளையைப் பெற்றவுடன் தாய் எவ்வளவு சந்தோஷம் அடைகின்றாள். அச் சந்தோஷத்திலும் பார்க்க, அப் பிள்ளையை மற்றவர்கள் நல்லவன் புத்திசாலி என்று கூறினால் அவளுக்கு மிகவும் சந்தோஷம் வருமென்று கூறுகிறார்கள்.

ஆனால் புத்திரர்களாகிய நாம் நமது பெற்றார்களுக்குப் பெரும் நன்றி செலுத்தத் தலைப்பட்டிருக்கின்றோம். நமது பெற்றார்கள் செய்த நன்றியை நாமெக்காலமும் மறவாமற் செய்து முடிப்போமாக.

## 'அந்த நாளும் வந்திடாதோ'?

வேத. தணிகாசலம்—9

நம்போன்ற மாணவர்களுக்கெல்லாம் திங்கட்கிழமையென்றால் அவ்வளவு சந்தோஷமில்லை. ஏன்? "புத்தகப் பையோடு நத்தைபோல் ஊர்ந்து" செல்லும் வார நாட்களில் முதல் நாளாகும். திங்கட்கிழமைக்கு முந்திய—அந்தநாள். அதுதான் அந்தநாள் மற்றைய நாட்களிலும் பார்க்க நீண்டு இருக்கக்கூடாதா; விடியாமல் அந்தநாளாகவே இருக்கக்கூடாதா என்று இவ்வாறு நினைத்திருப்போமல்லவா. எல்லாம் குழந்தை மனக் கற்பனை.

அந்தநாளிலேயே ஈழகேசரியும் நமது விஷயங்களையும் ஒரு பக்கத்திற் சுமந்துகொண்டு புறப்படுகின்றான். ஆதலின் ஈழகேசரி மாணவர்களுக்கு 'அந்தநாள்' மற்றைய நாட்களிலும்பார்க்க ஒரு முக்கியமான—விசேடமான நாளல்லவா? வெள்ளிக்கிழமை பாடசாலையிலிருந்து வீட்டுக்கோடியதும் 'சனிக்கிழமை எப்போது விடியப் போகிறது' என்ற சிந்தனை. சனி வந்துவிட்டால், இது போய் 'அந்த நாள்'—ஈழகேசரி நாள் எப்போது வரப் போகிறது' என்று என்மனம் படாதபாடு படும்.

அந்தநாளிற் சிலசமயம் நமது ஈழகேசரி 'லீவுகள்' பெற்றுவிட்டான் என்று அறிந்ததும் எனக்குச் சொல்ல முடியாத வேதனை தோன்றிவிடும். அந்த நாளுக்கு எவ்வளவு செல்வாக்கு.

சட்டை தொப்பி போட்டு மாட்டும் சட்டம்பிமார் முதலாகப் பெரிய உத்தியோகத்தர்களின் நன்மதிப்பையும் 'அந்த நாள்' பெற்றுவிட்டது. பெரும்பாலான உத்தியோகத்தர்களுக்கு அன்றுதானே காரியாலய விடுதலை.

கிறீஸ்தவ சமயத்தினர்கள் அதிகமாகக் — கட்டாயமாகப் பிரார்த்தனை செய்வதும் அந்த நாளிலேதான். அதனாலே அவர்களிடமும் ஒரு மதிப்பைப் பெற்றுவிட்டது அந்த நாள். இன்னுமொன்று முக்கியம். கூப்பன் கடைகளிற் கூப்பன்கள் வெட்டி ஒட்டி முடிக்கும் நாளும் அந்த நாள் தானே.

நண்பர்களே! சொல்ல மறந்துவிட்டேனே அந்தநாளை. அதுதான் வராதாமே. இல்லை. இல்லை. அதுதான் ஞாயிற்றுக்கிழமை! 'அந்த நாளும் வந்திடாதோ' என்று எண்ணியெண்ணி நான் வருத்தமடைவதை யார் தெரிவிப்பீர்கள்?

## அறியவேண்டியன

1. இலங்கையில் அடிமைத்தனத்தை ஒழித்த தேசாதிபதி யார்?
2. எந்நாளும் புகைந்து கொண்டிருக்கும் எரிமலை எங்கிருக்கிறது?
3. கதர்ப்புடவை என்பது யாது?
4. நவக்கிரகங்கள் யாவை?
5. கந்தபுராணஞ் செய்த புலவரின்பெயர்என்ன?
6. யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக ஆங்கிலப்பாடசாலை எங்கு ஸ்தாபிக்கப் பட்டது?
7. துட்டகைமுனு எந்தத் தமிழரசனை யுத்தத்தில் ஜெயித்தான்?

### பதில்

1. சேர் கோலின் காம்பெல்.
2. ஜாவா.
3. கையினால் நூல் நூற்றுச் செய்யப்படும் இந்தியப் புடவை.
4. ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது.
5. கச்சியப்ப சிவாசாரியார்.
6. வட்டுக்கோட்டையில்.
7. எல்லாள மகாராசா.

## பெரியோரை வழிபடல்

க. சிதம்பரநாதன்—128

பெரியோர்களுக்கு நீர் மரியாதை செய்யவேண்டும். அவர்களை அன்போடு வழிபடல் வேண்டும்.

பெரியோர் எதிரே உயர்ந்த ஆசனத்தில் இருக்கக்கூடாது. காலின்மேலே கால்போட்டுக் கொண்டிருத்தலும் கூடாது.

அவர்கள் பேசும்போது நீர் இடையே நுழைந்து பேசுதல் நல்லது அல்ல. எதிர்த்துப் பேசுதலும், கைகாட்டிப் பேசுதலும் கூடாது.

பெரியோர் உன்னிடம் பேசும்பொழுது நீர் வேறொருவருடன் பேசக்கூடாது. அப்படிச்செய்வது அவர்கள் பேச்சை அசட்டை செய்வது ஆகும். பெரியோர் ஒன்றை உமக்குத் தரும்பொழுது நீர் எழுந்து இரண்டு கைகளினாலும் வாங்கவேண்டும்.

பெரியோரை நீர் சந்திக்கும் பொழுது கை கூப்பி அவர்களை வணங்கவேண்டும். அவர்கள் உமது வீட்டுக்கு வருவாராயின், அவர்களுக்கு வந்தனம் செய்யத் தவறாதீர்கள். அவர்கள் போகும்பொழுதும எழும்பி வணங்கவேண்டும். அவர்கள் பின்னே நீர் சிறிது தூரம்போய் வழியனுப்ப வேண்டும். பெரியோர்களுக்குப் பணிந்தால் அவர்கள் உம்மை வாழ்த்துவர். நீரும் பெரியவராவீர்.

### ஈழகேசரி — பாலர் பகுதி

முழுப் பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

பிறந்த திகதி: ..............................

தந்தையார் அல்லது ஆசிரியர் ..............................

### போட்டிப் பத்திரம் இல. 3

(விடையுடன் சேர்த்தனுப்பவும்)

இல.....................

பெயர்..............................

விலாசம்..............................

..............................

பிறந்த திகதி.................. கீழ் / மேற் பிரிவு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# கலைசெறிந்த வாழ்க்கை

வாழ்க்கையை ஒரு கலையாகக் கொண்டு அதை நன்கு அனுபவித்து வருவதுமன்றி உலகத்துக்கும் அதன் இன்பத்தை யூட்டி வரும், நடனக் கலைஞன், உதய சங்கர் மனித வாழ்க்கையிற் கலை உயிர் போன்ற தென்பதை இக் கட்டுரையில் விளக்குகின்ருர் ஹிந்து சுதந்திர மலரில் அவர் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையின் சாரத்தை இனிப் படித்து இரசியுங்கள்.

கலையைப்பற்றி நல்ல ஞானமில்லாதவர்கள் அதைப் பற்றி அதிகமாக எழுதித் தமது சீவனோபாயத்துக்கு வழி தேடுகின்றனர் வாழ்க்கையென்ற கலை, இந்தியாவில் அதற்குரித்தான கவனத்தை இழந்துவிட்டது. எமது நாயகத்தன்மை வசீகரமாகக்கூடிய அக் கலையைச் சீரழிய விடுகின்ருேம்.

இசையும் நடனமும் இன்று உல்லாசப் பொழுதுபோக்காக இந்தியாவிற் கருதப்படுகின்றன. கலை ஒரு விளையாட்டுக் காரியமன்று. பொழுதுபோக்குக்கு ஏற்றதெனவும், அறிவுக்கு ஏற்றதெனவும் புத்தகங்களை இரு பிரிவாக வகுக்கின்ருேம். தத்துவஞானம், அரசியல், விஞ்ஞானம்போன்ற துறைகளில் நூல்களிருப்பதுபோலச் சிரித்து அனுபவிக்கக்கூடிய புத்தகங்களும் பத்திரிகைகளும் உண்டு. இவற்றையெல்லாம் நாம் ஒருவகையிற் சேர்ப்பதில்லை. ஆனுற் கலைவிஷயத்தில் எல்லாவற்றையும் ஒரு குப்பலாக்கி விடுகின்ருேம். காவிய நடனமென்ருலுஞ் சரி, ஒரு குறித்த நாட்டுக்குரித்தான உயர்ந்த நடனமென்ருலுஞ் சரி, பிற நாடுகளின் கதம்பக் கோவையாக அமைந்த நடனமாயினுஞ் சரி, அதில் நாங்கள் எவ்வித பாகுபாடுங் காட்டுவதாயில்லை. இக்காலத்தில் நடனங்களைப் பற்றி விமர்சனம் எழுதுவோரின் தொகை அதிகரித்துள்ளது. அப்படியிருந்தும் பரத நாட்டியத்திலும், கதகளியிலும், மணிப்புரியிலும், வேறு எத்தனையோ நடனங்களின் கலவைகள் செறிந்திருப்பதைக் கவனிக்கின்ருேம்.

கடந்த இருபத்தைந்து வருட காலமாக, ஐரோப்பாவின் பல பாகங்களில் நானும் எனது கோஷ்டியினரும் நடனமாடி வருகின்ருேம். நிகழ்ச்சிகள் முடிவுற்றபின்னர் மேடைமீது அநேகர் வந்து குவிந்து விடுவார்கள். இந்திய இன்னிசை வாத்தியங்களையும், எங்கள் நடன உடைகளையும் அவர்கள் ஆச்சரியத்துடன் பார்ப்பார்கள். சிலசமயங்களில் இந்திய நடனக் கலைபற்றிப் பிரத்தியேகமான சொற்பொழிவுகளும் நடாத்தியுள்ளோம்.

இந்தியாவில் இன்று கலை என்ருல், அது ஒரு பொழுதுபோக்காகி விட்டது. எமது பள்ளிக்கூடங்களிற் சொந்தப் பண்பாடு இடம்பெருத காரணத்தால் எமது வாலிபர்கள் வனப்பையும் ஆனந்தத்தையும் இழந்துவிடுகின்றனர்.

ஒரு நாட்டின் கலைச் செல்வம் வெறும் உல்லாசச் சாதனமன்று. அது பண்பாடு நிறைந்த வாழ்க்கைக்கு விதி சமைக்கும் தகைமை வாய்ந்தது. கலைப் பண்புசெறிந்த கல்வியானது, இசைந்த வாழ்க்கைக்கு இதமூட்டி அதைப் பூரணமாக்குகின்றது. அத்தகைய வாழ்க்கை பொலிவுற்று நிறைவு பெறுவதைப் பார்க்கின்ருேம். இவ்வகையான ஒரு கல்விச் செல்வத்துக்கு எமது பிள்ளைகள் உரிமை பூண்டவர்கள். அல்மோராவில் உள்ள உதயசங்கார் இந்தியக் கலைக்கோயில் இந்த நோக்கத்துடன் நிறுவப்பெற்றதாகும். மேற்றிசைக் கலா இரசிகர்களின் ஆதரவு இதற்கு அபரிமிதமாக உண்டு. வாழ்க்கையை ஓர் உயர்ந்த கலையாகப் பேணி அதை அனுபவிக்கும் முறையை, நாங்கள் எங்கள் பள்ளிக்கூடங்களிற் பயிற்றவேண்டும். இது நாளாந்த நிகழ்ச்சிகளில் மிக முக்கியம் வாய்ந்தது. வனப்பான ஒரு வாழ்க்கையை இதமாக நடாத்திக்கொள்ள நாம் தெரிந்துகொள்ளவேண்டும். சுதந்திர இந்தியா இத்துறையில் உழைக்குமென நம்புகின்றேன். ஒருதேசம் தனது கலைச் செல்வத்தை இழக்குமாகில் அது சகல சம்பத்தையும் இழந்துவிடுகின்றது.

# இரு கன்னிகைகள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

"செப்பிளங் கொங்கைமீர், கொப்புளங் கொண்ட குளர்வானை இப்பொழுது மீன் பொதிந்துநின்ற விசும்பென்ப தென்கொலோ?" என்று இன்னொரு காதலி, நட்சத்திரம் பூத்த குளிர்ந்த நீலவானமே கொப்புளங் கொண்டதாகக் கூறுகிருள். இவையெல்லாம் வெவ்வேறு சந்தர்ப்பங்களிற் கூறியபோதும், எல்லாம் காதலின் பண்பை உணர்த்தவே எழுந்தன. ஆனுல் மேற் கூறிய ஐந்து அடிகள் ஒரு காவியம் சொல்ல வேண்டிய பொருள் அத்தனையையும் அழகாகக் கூறிவிட்டன.

## காதலின் ஆழம்

அதிலே, பேசும் காதலர்களோ எட்டுத் திக்கையும் கட்டியாளும் இளவரசனும், மாடப்புருவோடு விளையாடும் அரசியுமல்ல. அவர் பேசுமிடம் மாளிகையின் நிலா முற்றமுமல்ல. அவர்களுடை காதலுக்கு ஆரவாரமும், நடிப்பும், கற்பனைப் பேச்சுகளுமில்லை. இயல்பாகவே காதலின் ஆழத்தில் எழுந்த பேச்சு. செயற்கையான கற்பனைச் சோடிப்பு அதிலேயில்லை. இருப்புப் பாரைகட்டும் விடாத கற்பாறை மெல்லிய மரவேருக் குடைந்ததுபோலவும், சீறிச் சினந்து வீசும் தீ நெகிழ்ந்து வழியும் நீர்க்கு அவிந்தது போலவும் கற்பனையின் ஆலாபனத்தால் ஊடுருவப்படாத நெஞ்சு இயற்கையாகத் தோன்றும் எளிமையால்நெகிழ்ந்துவிடுகிறது. அதுமாத்திரமா? பேசும் கண்களுடன் பக்கலில் உட்கார்ந்து உள்ளத்தோடு உள்ளத்தைப் பிணைக்கும் இரு காதலர்களைக் காண்கிருேம். அந்தச் சித்திரத்திலே! அளவிடமுடியாத காதலின் ஆழத்தோடு அன்பு கனியப் பார்க்குப் ஒரு பார்வையைக் காண்கிருேம். அதிலே! மெதுவாக நம் உள்ளத்தைக் கவ்வி ஈர்க்கும் எளிமையின் சக்திதான் என்னே!

## கற்பனைக் காட்சி

கற்பனையின் விளையாட்டு இதற்குச் சிறிதும் இளைத்தல்ல:

வந்தின முலையாளே
காந்தளின் முகைகண்ணிற்
கண்டொரு களிமஞ்ஞை
பாந்தளி தெனவுன்னிக்
கவ்விய படிபாராத்
தேந்தள வுகள்செய்யும்
சிறுசிறு நகைகாணுய்.

என்னும் கவியிலே கம்பன் காணுவது ஒரு புதிய கற்பனைச் சிருட்டி. அந்தக் கற்பனைச் சிருட்டியை அங்கங்களாகப் பிரிக்கமுடியும். அக் கற்பனையை ஆக்கும் மூலப் பொருட்களை வெவ்வேருக எடுத்துக் காட்டலாம். காந்தளின் முகை பாம்பை ஒத்தது; முல்லை மலர்வதோ சிரிப்பதை ஒக்கும்; மயில் பாம்புக்குப் பகையாயது இவை மூன்றுமே அவர் கற்பனு சித்திரத்தின் மூலப் பொருட்கள். தடாகமும் கரையும் முல்லையும்தான் தோன்றும் புறக்காட்சி. அதிலே கற்பனைவிளையாடும் விந்தைதான் என்னே! காந்தள் முகையைப் பாம்பின் பசுந்தலையென்று எண்ணிப்பக்கலிலிருந்த மயில் கவ்விக் கொண்டதாம். ஐயையோ இவ்வளவு பேதைமையா? பாம்பின் தலைக்கும் காந்தள் முகைக்கும் பேதம் தெரியாது, கவ்வும் பேதை மயிலே என்று முல்லைகள் மூரலிக்கின்றனவாம். விஞ்ஞான சாஸ்திரத்திலே புதிதாகக் கண்டு பிடிக்கும் ஒரு கருவிபோல, கலையிலும் இது ஒரு புதுச் சிருஷ்டி; ஒரு புது ஆக்கம் கவிஞனின் கற்பனையின் வேகம்; இதிலே உச்சியையடைகிறது. நேரே காந்தளையும், தடாகத்தையும், முல்லையையும் கம்பன் பார்த்தபின் இக் கற்பனை மனதில் தட்டியதல்ல. அக் காட்சியுமே அவன் மனத்திரையிற் கற்பனையாலேயே தீட்டப்பட்டது. அதன்பின் இந்தப் புதுச் சிருஷ்டியென் [illegible] கவியாக என்பதில் என்ன தடையிருக்கிறது.



# நமது வாசிகசாலை

தமிழுலகு: ஆசிரியர்: எஸ். எம். மகாலிங்க முதலியார்; பிரசுரம்: தென்னவர் வெளியீடு 1. தென்னவர் நிலையம், கோட்டாறு, தென்திருவிதாங்கூர்; விலை: ரூபாய் இரண்டு.

இந்நூலின் முன்னுரையில் பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் பெருமையும் தொண்டும் மிக விரித்துரைக்கப்பட்டிருக்கின்றன. தமிழிலும் தாய் நாட்டிலும் கொண்ட பேரன்புபற்றியே இந்நூல் யாக்கப்பட்டதாக முன்னுரை தெரிவிக்கிறது. i தமிழ் நாடு, ii தமிழ், iii தமிழர் iv தமிழர் கடமை என்னும் நான்கு தலையங்கங்களின் கீழ் தமிழின் தொன்மை, மேன்மை, பண்டைய தமிழர் மாண்பு முதலியவற்றை முன் பல ஆசிரியர்கள் கூறியவாறே இந்நூலிலும் கூறியிருக்கிருர். பழமையை நினைந்து நினைந்து இன்புறவேண்டுமென்பதும் பழைய நிலை அடையவேண்டுமென்பதும் நூலாசிரியர் கட்சி.

தமிழர் வசித்த பகுதியே உலகிற் சிறந்ததென்பதை பூமிசாஸ்திரரீதியிலும் நிரூபிக்க விரும்புகிருர். ஆஸ்திரேலியா பூமியின் வேறுபட்டது என்பதும் ஆஸ்திரேலியாவின் தாக்குதன் மூலமே பூமி $23\frac{1}{2}°$ சரிந்துள்ளது என்பதும் கண்டங்கள் அனைத்திலும் மேற்குப்பகுதி மலையாயும் கிழக்குப்பகுதி பதிவாயும் இருப்பதாலேயே மேல், கீழ் என்ற காரணப் பெயர் உண்டாயதென்பதும் எவ்வளவிற்கு உண்மையென்பது அறியப்படமுடியாதாயினும் ஒரு பொழுதுபோக்கான ஆராய்ச்சியாயிருக்கிறது.

நூல் அழகிய முறையிற் பதிப்பிக்கப்பட்டிருக்கிற தெனினும் எழுத்துப் பிழைகளும், சொற்றொடர்ச்சேர்க்கைப் பிழைகளும், புணர்ச்சி வழுக்களும் பல காணப்படுகின்றன. —வ. ந.



தேக மலர்ச்சியே
அவரை தகுதியும் தந்நம்பிக்கையும் உடையவராகச் செய்கிறது

அவர் ஒரு பிரபல சாம்பியன். எல்லோரும் அவருடைய சந்தோஷ மனப்பான்மையையும் தந்நம்பிக்கையையும் மெச்சுகிருர்கள். அவர் தினமும் லைப்பாய் பாவித்து ஸ்நானம் செய்கிருர். அதன் செழிப்பான சுறுசுறுப் பளிக்கும் நுரை சருமத்துவாரங்களில் ஊடுருவிப்பாய்கின்றது. அவருக்கு ஊக்கத்துடன் மகிழ்ச்சி தரும் தேகமலர்ச்சியையும் அளிக்கின்றது. இதர ஸ்நான சோப்புகளைவிட லைப்பாய் 20% காரம் குறைந்தது. அதனுலேயே முகம், கைகள் கழுவுவதற்கு மிகச்சிறந்தது.




இதனுல் தான் அவர் பாவிக்கிருர்

லைப்பாய்
டாய்லட் சோப்

LBT. 21-169 TM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் கதை

ஆங்கிலத்தில் எழுதியவர்
ஜே. வி. எதிர்வீரசிங்கம்

# தங்கப்பூச்சி

புராதன இலங்கைச் சித்திரம்

மொழிபெயர்ப்பு: இ. அ.

[மொழிபெயர்ப்பு உரிமைபெற்றது]

**இதுவரை .. .. ..**

பொலனறுவை மன்னனுக்கு வயதாகி விட்டபடியால், மிருந்தலை இளவரசனுக்குப் பட்டஞ் சூட்டத் தீர்மானிக்கப்படுகின்றது. மிருந்தலை இளவரசனைப் பண்டார திசாவ கொலை செய்தானெனத் தீர்ப்பளிக்கப்பட்டுச் சிறை செய்யப்படுகின்றான். வேடுவர் கண்டெடுத்த பெண் குழந்தையான தங்கப்பூச்சி அவர்களின் இராணியாக விளங்குகின்றாள். நீராடுதற்காகச் சென்ற தங்கப்பூச்சி சேரிக்குத் திரும்பாததை யிட்டு வேடுவர்கள் பரிதவிக்கின்றனர். பின்னர் அவளைத் தேடிச் செல்கின்றனர்......... போசன் திருநாளன்று பொலனறுவையிற் கட்டப்பெற்ற சமாதியின் கலசச் சூட்டு விழாவுக்குத்தேவ மெனிக்காவும் செல்லுகின்றாள். பொலனறுவை மன்னன் அவளை அழைத்துக்கொண்டு சேனவீர என்ற இளவரசனுடன் மாளிகா சென்றடைகின்றான். தங்கப் பூச்சியைத் தேடிச் சென்ற வேடுவர்கள் குமாரிஹாமியையும் புத்திரகுமரையாவையும் சந்தித்து அவர்களுடன் சேர்ந்து தங்கப்பூச்சியைக் காடுமேடெங்குந் தேடியலைகின்றனர். இதற்கிடையில் பண்டாரதிசாவ விடுதலை பெற்றுத் தனது குடும்பத்தைத் தேடுகின்றான். பொலனறுவை மன்னன் இறந்துபோகவே, சேனவீர அரியணை ஏறுகின்றான். அவன் பண்டாரதிசாவவுடன் சேர்ந்து இருவரும் குமாரிஹாமியையும் புத்திரகுமரையாவையும் தேடுகின்றனர். வேடுவர்களுக்குத் தாங்க முடியாத துக்கம். தங்கப் பூச்சி அகப்படுவதாயில்லை. ஒருநாள் இரவு காட்டிற் பேரொலி கேட்கின்றது. அது ஆவிகளின் அட்டகாசமென நம்பி, வேடுவர்கள் பயந்து நடுங்குகின்றனர். தாயும் மகனும் அவர்களை உற்சாகப்படுத்துகின்றனர். தூரத்தில் ஆவிகள் செல்வதைக் காட்டி வேடுவர் தலைவன், அவை பற்றிய விபரங்களைக் கூறுகின்றான். வேடுவர் தலைவனுக்குப் பயம் ஏற்படவே அவ்விடத்தைவிட்டுத் தனது சகாக்களுடன் ஓட்டம்பிடிக்கின்றான். தாயும், மகனும் பழகிய குரல் எழுந்த திசையை நோக்கிச் செல்கின்றனர். சேனவீரனும் அவனது கோஷ்டியும் ஒரு குகையை அடைகின்றனர். அக் குகைக்குளிருந்து வெளிவந்த கிழவன் பொலனறுவை இராச்சியம் தனக்கே உரியதெனக் கூறுகின்றான். வாக்குவாதம் பலக்கின்றது. கிழவன் தானே மின்னேரியா இளவரசன் என்பதை ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டித் தங்கப்பூச்சியை மணந்துகொள்ளும்படி சேனவீரனுக்குப் பணிக்கின்றான் ..............

## 17. இரஞ்சிதராணி iii

**தங்கப்பூச்சி அந்த மணி** மாலையை விறைப்பாகப் பார்த்தாள். அவளுக்கு ஒரே ஆச்சரியமாக விருந்தது. "என்ன: இது உண்மைதானு? பிரபுவே! அம்மாலை என்னிடமேயிருந்தது. அதன் ஒரு பகுதியை நான் இப்போதும் அணிந்திருக்கிறேன். அதனைக் கோரையன் என்ற மகா மந்திரவாதியிடங் கொடுத்துப் பொலனறுவை இளவரசனின் பைத்தியத்தைக் குணப்படுத்தும்படி பணித்திருந்தேன். அம்மாலை மந்திர சக்தி வாய்ந்தது." என்று கூறி அதிசய முற்றாள் அப் பெண்மணி.

"அழகு வடிந்தொழுகும் வேடுவக்கட்டழகியே! நான்தான் அந்த இளவரசன். ஐயோ, நான் உன்னைக் காண்பதற்கு என்ன தவஞ் செய்தேனே? இப்போது நான் எனது அரசபதவியை இழந்து நிற்கின்றேன். எனது பெருமை யாவும் ஒரு கணத்தில் மங்கி மறைந்து விட்டன. அப்படியிருந்துங் கங்குகரையற்ற மகிழ்ச்சியின் உணர்ச்சியோட்டத்தை நான் உனக்கு எப்படி எடுத்துரைப்பேன். உன்னைச் சந்தித்ததே எனது வாழ்க்கையின் பெரும் பேறுகும் என மனக்கண்ணிற் கூட இடம் பெருத ஒரு மங்கை எனது எதிர்கால வாழ்க்கையில் அக்கறை கொண்டு, எனது வருத்தத்தைக் குணப்படுத்துவதற்குக் காலாக நின்ருளே என்று எண்ணும்போது, எனது உள்ளங் குளிர்ந்து பூரிப்படைகின்றது. எனது துக்கத்திற் பங்குபற்றிப் பரிகாரஞ் செய்த மடமங்கையை எனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்வதற்கு நான் எதற்காகப் பின்னிற்க வேண்டும்" என்று சொல்லி ஆனந்தக் கண்ணீர் சொரிந்த சேனவீரன், குகைக்குள்ளிருந்த கிழவனை யணுகி அவனைப் பார்த்து "எனது பிரபுவும், இராசாதி இராசனுமான கீர்த்திசேனனே! நான் தங்கள் கட்டளையைச் சிரமேற்கொண்டு அக்கட்டழகியை மணந்து கொள்ளச் சித்தமானேன்." என்று சொல்லி அம்மங்கை முன் முழங்காலிட்டு, அவளது பாத கமலங்களை வணங்கினுன். காந்தள் மலர் போன்ற அவளது கரங்களைக் கண்ணில் ஒற்றினுன். அந்தப் பெரு மகிழ்ச்சி காரணமாக அவனது உணர்ச்சி கவிதையாகப் பரிணமித்திருக்கலாம். ஒருவேளை அவன் இப்படித்தான் பாடினுனே, என்னவோ?

கானகத்துப் புள்ளினங்கள்
  தாலாட்டும் பண்ணிசைக்கக்
கவின்முல்லைப் பந்தரின்கீழ்ப்
  புகலிடத்தைக்கொள்வோம்நாம்
வானகத்தே வெண்மதியம்
  தாரகைகள் துணைநிற்கும்,—
வாஞ்சைமணக் கடவுளர்கள்
  இருவரையுங் கூட்டுகையில்!
வனவெளியின் மோகனமும்
  இயற்கையெழில் வாழ்ப்பும்
வளர்கிறதென் இதயத்திற்
  பெருங்காதற் சுடருன்மேல்;
வனிதையள் நீ—வடிவழகி!
  வாக்களித்தால் எதிர்கால
வாழ்க்கையது இருவோர்க்கும்
  எத்தகைய மகிழ்வாகும்!!

தங்கப்பூச்சிக்கு உள்ளங் கசிந்துவிட்டது இல்லாதுபோனுல் அவள் இவ்வளவு இதமாகப் பாடியிருக்க மாட்டாள். அவள் பாடுகின்றாள்:

என்னிதயம் உன்காதற்
  புல்லரிப்பாற் றுடிக்கிறது;
எமன்கொணரும் சாவன்றே
  நமைப்பிரிக்கும் வன்மையது;
உன்னிடத்தில் என்வாழ்வு
  உள்ளளவும் அந்தரங்க
உண்மையுடன் நடந்துகொளக்
  காதலெந்தன் வாக்குஇதோ.

* * *

"இந்த ஆனந்தத்தில் நான் எனது கதையை மறந்து போகமாட்டேன். சொல்லுகின்றேன் கேளுங்கள்." என்று உரப்பிக்கொண்டு, மிருந்தலை இளவ சன் தொடர்ந்து பேசுகின்றான்:

"பதினெட்டுவருட காலத்துக்கு முன்னர், இதோ! இங்கு நிற்கும் இப்பெண்—பண்டார மந்திரத்துக் குரிமையான இப்பெண்—என்னிடம் ஒரு பெண் குழந்தையை அனுப்பிவைத்தாள். அச்சிசுவின் உயிரைப் போக்கிவிட வேண்டுமென்பது கட்டளையாக விருப்பதாகவும், என்ன விதப்பட்டும் அப்பச்சைக் குழந்தையின் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமெனவும் சொல்லியனுப்பியிருந்தாள். இது பரம இரகசியமான காரியமாக விருந்தபடியால் நான் பால்மணம் மாருத அப்பச்சிளங் குழந்தையை ஏற்றுக் குதிரைமீதேறி இக் காட்டை நோக்கிவந்தேன். இங்கு நாடு கடத்தப்பட்ட கொல்லன் ஒருவன் இருந்தபடியால் அவனிடம் அக் குழந்தையை ஒப்படைத்தேன். அவன் அப்பிள்ளையை வேடுவர்களிடங் கொடுத்திருந்தான். அக்குழந்தையே இன்று அவ் வேடுவரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட மனோரஞ்சித இராணியாகத் திகழ்கின்றது.

"தங்கப்பூச்சி எனது சொந்த மகள்" என்று அலறி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள் குமாரிஹாமி.

"வடிசாராயத்தை மூக்கு நிறையக் குடித்தபடியால் எனக்கு ஒன்றுந்தெரியவில்லை. அந்த அவல நிலையில் அக் குழந்தையைக் கொலைசெய்யும்படி நான் கட்டளையிட்டு விட்டேன்! ஐயோ படுபாவியாகிய நான் இந்தப்பழியைச் செய்தேனே! இதற்கு என்ன பிராயச்சித்தஞ் செய்யப்போகின்றேன்" என்று பிரலாபித்தான் மின்னேரியா திசாவ.

மின்னேரியா இளவரசன் அவனைத் தேற்றிக் கூறியதாவது: "பிரபுவே, தாங்கள் என்னைக் கொலைசெய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுச் சிறைவாசமும் அனுபவித்துவிட்டீர்கள். அக்குழந்தையைக் கொலை செய்யும்படி பணித்த கோரமான கட்டளையானது உம்மை வேவீரர் வழியிலே தொடர்ந்து பிடித்து உம்மை ஆட்டும்வகையும் ஆட்டிவைத்தது. எய்தவனிருக்க அம்பை நோவதில் ஒருபயனுமில்லை. வினை விதைத்தவன் வினையை அறுப்பான். தினை விதைத்தவன் தினையை அறுப்பான். ஒவ்வோர் செய்கைக்கும் பிரதி பலனுமுண்டு. மலையே வந்தாலும் தலையே சுமக்க வேண்டும். ஆகவே சும்மா வருந்துவதால் ஒருபயனுமில்லை..."

"எனது அன்புக்குரிய சகோதரியைக் காண்பதற்கு நான் முற்பிறப்பில் என்ன புண்ணியம் செய்தேனே" என்று ஆனந்தக் கூத்தாடினுன் புத்திரகுமரையா.

"ஆமாம்; எனது ஆசைக்குகந்த மணவாளனுகிய புத்திர குமரையாவை இங்கு காண்பதற்கு நான் கொடுத்து வைத்துப் பிறந்திருக்கின்றேன் போலும்" என்று கூறி தேவமெனிக்கா பின்வருமாறு பேசுகின்ருள்: "புத்திரகுமரையாவே, நான் உன்மீது கொண்ட காதலாற் பிறந்த வீட்டையும் விட்டுக் காடுமேடெல்லாம் அலைந்துதிரிய வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானேன். அத்துடன் உனது தகப்பன் குற்றமற்றவர் என்பதை நிரூபிப்பதற்காக எவ்வளவோ கஷ்டப்பட்டிருக்கின்றேன். உனது தாயாரையும் உன்னையும் காட்டிலிருந்து நாட்டுக்கு மீண்டும் அழைத்துக்கொளவதற்காக நான் செய்த காரியங்கள் ஒன்று இரண்டல்ல. நான் செய்த பிரயத்தனங்கள் இன்று நல்ல பயனைக் கொடுத்திருக்கின்றன. ஆகவே, என்னை நீ மனைவியாக ஏற்றுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்ருய்" எனப் பரிந்து பேசினுள் தேவமெனிக்கா.

"மகனே புத்திரகுமரையா, தேவ மெனிக்கா சொல்வதில் உண்மை இருக்கின்றது. எங்களை விடுதலையாக்குவதற்காக அம்மங்கை படாத பாடுபட்டிருக்கின்ருள். எங்கள் உயிரைக் காப்பாற்றி வைத்த அப்பெண்மணியை நீ மணந்து அவளைப் பண்டார மந்திரத்துக்கு அழைத்துச் செல்வது நீதியே யாகும்" என்று மகனை வேண்டினுன் மின்னேரியா திசாவ.

"அது ஒருபோதும் நடக்கப்போவதில்லை" என்று முழக்கித் தள்ளிக்கொண்டு, சேனவீர பேசுகின்ருன்: பண்டார மந்திரம் பரிசுத்தமான ஒரு மாளிகையாகும். அவ்விடத்தில் அடி வைக்கத்தானும் இச்சண்டாளப் பெண் அருகதையற்றவள். வாலிபர்களைத் தேடிப்பிடிக்கும் வேட்டையில் ஈடுபட்டுள்ள இவ்வனிதைக்கு அங்கு என்ன அலுவல்! பிரபு பண்டார குற்றமற்றவர் என்பதை நிரூபிப்பதற்கு அவள் பெரிதும் உதவியாக இருந்திருக்கின்ருள். இதை மறுப்பதற்கில்லை. ஆனுல் அப்படி அவள் நடந்து கொண்டதின் அடிப்படையான நோக்கந்தான் என்ன? மாளிகையிலுள்ள கூடங்களுக்குள்ளே போய்வருவதற்கு ஒரு சந்தர்ப்பத்தைப் பெற்ற அக்கிராமப் பெண் அதனைத் தனக்குகந்த ஒரு நல்ல ஆசாமியை அப்பிக்கொள்வதற்கே நன்கு பயன்படுத்திக் கொண்டாள். கேவலம்! தனது சொந்த இச்சையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக வேஷம் போட்ட இந்த ஆண்மாரி என் கண்முன் நிற்பதைக் கூட நான் கணமேனுஞ் சகிக்கமாட்டேன். மணிமுடி தாங்கும் ஒரு மன்மதனுக்குப் பெண்ணுகிக் கொள்வதற்கு அவள் போட்ட ஆட்டங்களை நான் என்னென்று சொல்வேன். என்னுடன் அவள் தேனினும் இனிமையாகப் பேசி மதுரமான பலவார்த்தைகளைவாரி, வாரி இறைத்தாளே! நான்தான் அவளின் கண்கண்டதெய்வமெனக் கண்களில் ஒற்றித் தொழுது எழுந்தாளே! இப்போது நான் எனது அரசபதவியை இழந்ததைக் கண்டாள். உடனே வேருேர் இளவரசன் மீது தனது காதற் பாணங்களைச் சொரியத் தொடங்கிவிட்டாள்! இந்த மாய்மாலக்காரியால் இராச்சியத்துக்கே ஆபத்தாகும். எனது வார்த்தைகளை நம்புங்கள்."

சேனவீரனுக்குத்தாங்க முடியாத கோபம். அத்துடன் சொல்ல முடியாத ஆனந்தமும். அவன் தொடர்ந்து பேசுகின்ருன்; "எனது மகிழ்ச்சிக்கோ இன்று எல்லையில்லை. இந்தப் பெண்ணின் மாயவலையினின்றும் எப்போது தப்பிக்கொண்டேனே, அப்போதே எனக்கு அதிர்ஷ்டம் வந்து சேர்ந்துகொண்டது. கானகத்து வடிவழகி எனது கருத்துக்கிசைந்த மனைவியாகிக் கொண்டாள். அவளின் மிருதுவான கரங்களைப் பற்றுவதற்குத் தானும் நான் என்ன பாக்கியம் செய்தேனே! புத்திரகுமரையாவே நீ தப்பிக்கொண்டாய். அந்த மாயக்காரியின் சாலவித்தைகளுக்கு நீ உடன்பட்டிருந்தால் உனக்கு மீட்சியே கிடைக்கமாட்டாது. நான் இப்போது ஒரு வேடுவனுகிக் கொண்டேன்; ஆட்சேபமில்லை. எனது வாழ்க்கைத் தேர் இனி இந்தச் சோலைகளுக்குள்ளேயே ஊர்ந்து செல்லப் போகின்றது. இப்போது சில நேரத்துக்கு முன்னர் நான் ஒரு மன்னனுக விளங்கினேன் அல்லவா? புத்திர குமரையா என்ன பேசாது நிற்கின்ருயே!"

"சேனவீர! நீ எனது அருமை மைத்துனன் அல்லவா? உனது ஒவ்வோர் வார்த்தையும் பட்டந் தீர்ந்த வைரம் போன்றன. எத்தனையோ வாலிபர்களின் தூய வாழ்க்கையானது தீய குணமுள்ள பெண்களால் உருக்குலைந்து மண்ணுகி விடுகின்றது. அசோககமத்து வாலிபர்கள் அநேகரின் வாழ்க்கையை இவள் பாழாக்கினுள் என்பதை நான் முன்னர் அறிந்ததேயில்லை. எத்தனையோ யௌவன புருஷர்களை எள்ளி நகையாடியது மன்றி அவர்களை ஏமாற்றியுமிருக்கின்ருளே! சூதுவாதற்ற சாது போன்ற மின்னேரியா இளவரசன் தேவமெனிக்காமீது பரிதாபமுற்று அவளுக்குத் துணை புரிந்ததை நினைக்கும்போது எனக்கு எல்லாம் ஒரே நூதனமாக விருக்கின்றதே" என்ருன் புத்திரகுமரையா.

"நான் சொல்வதையுங் கேளுங்கள்" என்று கூறி மிருந்தலை இளவரசன் உணர்ச்சியுடன் பேசியதாவது: தேவமெனிக்காவை நான் ஒரு மகளெனக்கருதி அவள்மீது இரங்கிவந்தேன். அவ்வளவுதான் அவள் தீய குணங்களை நிறை

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*The*
# EELAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
LARGEST CIRCULATION IN CEYLON, INDIA & MALAYAN UNION

Vol. 19 | Chunnakam, Sunday, Aug. 29, 1948 | No. 8

## தங்கப்பூச்சி

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்த ஒரு பெண்ணை நான் கனவிலுங் கருதியதில்லை. பாவம்! பாபா சிங்கோ எனது துப்பாக்கிக்கு இரையாகிக் கொள்ளவேண்டியதில்லை. தேவ மெனிக்காவின் ஆசார வார்த்தைகளைக் கேட்டுத் தைரியம் பெற்ற பாபாசிங்கோ அவத்தில் என்னாற் கொலையுண்டான். அவனது இரத்தக்கறை என்னையும் பற்றிக் கொண்டது. தன்னைப்போன்ற கட்டழகி அக்கிராமத்தில் இல்லையென்ற எண்ணத்தால் அவளிடம் அகந்தை குடிகொண்டது. இயற்கையன்னை ஈந்த செல்வத்தை அவள் துர்ப்பிரயோகம் செய்து கொண்டது மன்றி பல வாலிபர்களின் உள்ளங்களையும் புண்ணாக்கி விட்டாள்."

தேவமெனிக்காவுக்கு உலகமே இருண்டுவிட்டதுபோலத் தோன்றியது. "எனக்குப் பின்னால் இழுபட்டுத்திரிந்த புருஷர்கள் இப்போது எனக்குத் தீர்ப்பளிக்கத் துணிந்து விட்டனர். எனது வாழ்க்கையில் நிகழ்ந்தனவற்றை நினைவு கூரும்போது, நான் வெறுங் கைப்பொம்மையாக விளங்கியிருக்கின்றேன் என்பது நன்கு புலனாகின்றது. ஆண்பிள்ளைகளை நம்பிப் படுமோசமடைந்த ஓர் ஏழையாகி விட்டேன். அசோககமத்துக் கட்டழகியெனப் புகழ்ந்து பேசப்பட்ட தேவமெனிக்காவின் கதி என்ன? ஐயோ என்பாட்டில் நான் ஓர் அமைதியான வாலிபனை மணஞ் செய்து அடக்க ஒடுக்கமாக வாழ்க்கையை அனுபவித்திருக்கலாமல்லவா? அப்படியானால் இவ்வளவு உபத்திரவத்துக்கு நான் ஆளாகியிருந்திருக்க மாட்டேன். இல்லை! இல்லை!! எதற்காக நான் இப்படி எண்ணி எனது மனதைப் புண்ணாக்கிக் கொள்ளவேண்டும்? எனது கெட்ட நடத்தைக்கு நான்மட்டுந் தான் பாத்திரவாளியா? ஒருபோதும் இல்லை.

"பாபாசிங்கோ உண்மையாகவே என்மீது அன்பு பூண்டிருந்தான். என்னைத் தெய்வமெனப் போற்றிப் பூசித்தானல்லவா? அப்போது நீ (மிருந்தலை இளவரசனைப் பார்த்து) குறுக்கிட்டு என்னைக் காப்பாற்றுவதாகக் கூறினாய் அல்லவா? எனது எதிர்கால வாழ்க்கையை நீதானே மாற்றினாய். நானும் உன்னை நம்பி எத்தனையோ கோட்டைகளைக் கட்டிவந்தேன்.

"இனிய வார்த்தைகளால் என்னைப் பரவசமாக்கிய நீ, இன்று ஒன்றுமறியாத ஒரு இளம் பெண்ணின் வாழ்க்கைக்கு இடறுகட்டையாக நிற்கின்றாய். என்னை அக்காலத்தில் ஆகாயத்திலே தூக்கி வைத்துப் பேசியவற்றை மறந்து விட்டாயா? உனது வார்த்தைகளை நம்பி நான் பெரிய புள்ளிகளிற் சிந்தையைப் படியவைத்தேனே! உயர்ந்த இடத்து வாலிபனே எனக்கு உகந்தவனென்று பன்னிப் பன்னிச் சொன்னாயே!

"கடைசியாக ஒரேயொரு துணையை நம்பி எங்கெல்லாம் அலைந்து திரிந்தேன். அந்தப் பராக்கிரம சாலியையும் என்னிடமிருந்து பிரித்துவிட்டாய். கேவலம்! அரை நிர்வாண கோலத்தில் நிற்கும் ஒரு வேடுவப் பெண்ணுடன் அவனைக் கூட்டிவிட்டு நின்று கூத்துப் பார்க்கின்றாய். நீயே, ஒரு கொலைகாரனாக விருந்து கொண்டு, என்னைப் பார்த்துப் பரிகசிக்கின்றாய். கெட்ட நடத்தையுள்ள ஒரு மதிப்பற்ற பெண்ணென்று தள்ளி நகையாடுகின்றாய். கெட்டி! கெட்டி! உனது சிறப்பை மெச்சினேன். எனது துக்கத்தைப் பொறுக்கமுடியாமற் புத்திர குமரையாவின் நிழலிலே தங்கலாமென நினைந்து, அவனை அணுகினேன். அதற்கும் நீ வினைதேடி விட்டாய். நாடு கடத்தப்பட்ட அந்த வாலிபனை விடுதலை செய்வதற்கு நான் எவ்வளவு கஷ்டமுற்றேன் என்புதை நீ அறிவாயா? அவன்கூட இன்று என்னை மோசக்காரி யென்று சொல்லித் தூஷிக்கின்றான். அட்டை போல ஒட்டிக் கொள்ளும் ஓர் அற்ப ஜெந்து என்று சொல்லி நிந்திக்கின்றான். அசோக கமம்! ஆ! என்ன அருமையான கிராமம். அதின் குளிர்மையென்ன? அதன் வனப்பென்ன? எனது சொந்தக் கிராமத்துக்கு இனி நான் திரும்பிப்போகலாமா? சீ! அம்மண்ணில் இனி அடியெடுத்தும் வைக்கவே மாட்டேன். உயிரோடிருப்பதிலும் பார்க்க இறப்பதே மேலானது. மரணமே சகல நோய்க்கும் ஏற்ற சஞ்சீவி" என்று சொல்லிப் பைத்தியமுற்றவளைப்போல அலறிக்கொண்டே அதிகவயதான மின்னேரியா இளவரசனின் உடைவாளைப் 'பளீர்' என்று இழுத்துத் தேவமெனிக்கா தனது உயிரை மாய்த்துக்கொண்டாள். மறுகணம் இரத்த வெள்ளத்தில் ஒரு மங்கை இறந்துகிடப்பதை அங்கு நின்றவர்கள் கண்டு பதைபதைத்தனர். ஒருவரும் அசையவில்லை. அடங்கியொடுங்கி நின்றவண்ணம் அந்த மங்கையின் வெற்றி கொண்ட முகத்தைப் பார்த்தனர். அப்போது மிருந்தலை இளவரசன் அவர்களைப்பார்த்து மெல்லிய குரலிற் பேசுகின்றான்: "உலகம் ஒரு மாயை. பிறப்பனவெல்லாம் என்றோ ஒருநாள் இறந்தே தீரவேண்டும். வாழ்க்கை நிலையற்றது. காலையிற் பனி போல் அநுமாயமாக மறைந்து விடுகின்றது. போதி முனிவன் காட்டியுள்ள தூய அறநெறியே மனிதனை ஈடேற்றும் தகைமை வாய்ந்தது.

"மணமக்களே, நீங்கள் இந்த நிமிஷமே உங்கள் பரிவாரங்களுடன் இராச்சியத்துக்குப் புறப்படுங்கள். கானகத்துக்கு அரசி, இனி பொலனறுவையின் இராணியாக விளங்குவாளாக. அவளின் பெருமையையுங் கண்ணியத்தையுங் கருதி நான் இதோ எனது இராச்சியத்தைப் பரித்தியாகஞ் செய்கின்றேன். எனக்குச் சொந்தமானது ஒன்றுமே இனி இந்த உலகத்தில் இல்லை.

"போதி முனிவன் காட்டிய வழியைப் பின்பற்றி நான் ஒரு பௌத்த சன்னியாசியாகின்றேன். கையில் பிச்சாபாத்திரம் ஏந்தி ஒரு பிக்குவாக சேவை செய்யப்போகின்றேன். புத்தபகவானின் அந்த மெய்ஞ்ஞானச் சுடர்முகங் கண்டு அமைதிபெறச் சித்தமானேன்.

"புத்த விகாரையே இனி எனக்குப் பெரிதும் பிரியமான இடமாகும். பகவான் காட்டிய தரும வழிகளைப் பின்பற்றி ஆத்ம ஈடேற்றம் பெறுவதே எனது வாழ்க்கையின் இலட்சியமாகும்.

"வாழ்வு மாயமெனும்—உண்மை
மனத்திற் கொள்ளாமல்
நாளும் நைந்திடுதல்—எமக்கு
நகைப்பை தருகுது"
"துன்பச் சுழியிலே—விழுந்து
சுழலும் உலகத்தை
இன்பக் கரையேற்ற—நீயும்
இரங்கிட வேண்டும்."

"அனைவருக்கும் எனது வணக்கம். நான் போய்வருகின்றேன்."

[முற்றிற்று]

★

### முடிவுரை

இவ்விதழுடன் **தங்கப்பூச்சி** வாசகர்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளுகின்றாள்.

இவ்வளவு காலமாக இவ்விருந்தையனுபவித்துவந்த வாசகர்கள் இதன் நயத்தை எடுத்துக் காட்டினார்கள். அதுபோதாது. குறை குற்றங்களையும் எழுதியனுப்பவேண்டும்.

இக்கதை இன்னும் ஆங்கிலத்தில் வெளியாகவில்லை. கையெழுத்துப்பிரதியிலிருந்தே மொழிபெயர்க்கப்பட்டது.

இதற்கு அணிந்துரை எழுதியுள்ள மேற்சபை அங்கத்தவர் **ஸ்ரீ. ஏ. காடினர்** அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "........இலங்கையின் புராதனப் பெருமை பற்றி மக்கள் அறிந்துகொள்வதற்கு ஆசைபபடும் இந்நாட்களில் அதன் பண்டைப் பெருமைபற்றி எழுதப்பட்டுள்ள இக்கதை ஏற்றதொன்றாகும். பழைய காலச் சிறப்புகளை ஆசிரியர் அப்படியே படம்பிடித்துள்ளார்...... ......பொலனறுவை சிறப்புற்றுத் துலங்கிய காலத்தை இலங்கையின் பொற்காலமென்லாம். அது மகத்தானவோர் சீர்திருத்தத்துக்கு நிலைக்களமாக விளங்கியது................"
இப்படி எழுதிக்கொண்டுபோகின்றார்.

இதன் ஆசிரியர் ஸ்ரீ ஜே.ஸி.எதிர்வீரசிங்கம் தமது முன்னுரையில் எழுதுவதாவது: "இலங்கையிலுள்ள அடர்ந்த காடுகளில் மாடமாளிகைகள் பல சிலமடைந்து கிடக்கின்றன. சிற்பக்கலையின் சிறப்பை எடுத்துக்காட்டும் இம்மாபெருங் கட்டடங்கள் பழம்பெருங் கதைகளையுங் கூறுகின்றன........."

வாசகர்களே, உங்கள் முடிவு என்ன?

— இ. அ.




இப் பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு திருமகள் நிலையம் நா. பொன்னையா அவர்களால் சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில், 1948-ம் ஆ ஒகஸ்டுமீ 29உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org